# போலீஸ் பார்வை

# POLICE PARVAI

மாத இதழ்

நல்ல விதைப்பு நலம் காக்கும் மாகும்

• மலர்-9 • Volume-9 • இதழ்-9 • Issue-9 • ஜுலை-2024 • July -2024 • விலை ரூ.15/- • Rs.15/-

POLICE PARVAI NEWS WEB TV

E_Book: www.policeparvai.com





## விருதுநகர் மாவட்டத்தில் பந்தல்குடி காவல் நிலையத்திற்கு தண்ணீர் சப்ளை நிறுத்திய ஊராட்சி மன்ற தலைவர்



## திருச்சியில் 3 ரவுடிகளை விரட்டி பிடிக்க முயன்ற காவலருக்கு அரிவாள் வெட்டு

## ஆன்லைன் ஸ்கேமில் ஈடுபடும் நபர்களுக்கு சிம் கார்டு கடத்த முயன்றவர்கள் கைது

காவல் குழுவினருக்கு ஆணையர் திரு.சந்தீப்ராய் ரத்தோர் IPS அவர்கள் பாராட்டு





## கொள்ளிடம் காவல்நிலைய காவல்துறையினர் கூண்டோடு ஆயுதபடைக்கு மாற்றிய SP வருண்குமார் IPS

திருச்சி மணல் திருட்டு மாபியா கும்பலுக்கு துணைபோனதால் நடவடிக்கை

## நேர்மையாக இருந்தால் காத்திருப்போர் பட்டியலா?


கள்ளக்குறிச்சி சம்பவம்: ஏடிஜிபி மகேஷ்குமார் அகர்வாலை காத்திருப்போர் பட்டியலுக்கு மாற்றிய தமிழக அரசு



அகத்தியர் உரைத்த உடம்பின் 4,448 நோய்கள்

இயற்கை வாழ்வியலும் உடல் நலமும்

www.policeparvainews.com இணைய தளத்தில் செய்திகளை உடனுக்குடன் தெரிந்து கொள்ளலாம்...



ஆனி மாத பௌர்ணமி 2024: இப்படி விளக்கேற்றி பாருங்க, கேட்ட வரம் கிடைக்கும்...


திருச்சியில் ஓர் இனிய உதயம்!
SR
Our Grocery
தரமான மளிகை
மலிவான
விலையில் உங்கள்
இல்லம் தேடி...
ஒரே ஒரு போன் கால்
SR OUR GROCERY
Digital Market @ you're Door Step
No.8, Erumbeeswarar Nagar, Thiruverumbur,
Trichy - 620 013. Tamilnadu.
E-mail:srourgrocery@gmail.cm | Web: srourgrocery.com
9894890808
8610643636


7 Star
Sports Academy
ROLLER
SKATING


AEROSKATOBALL ASSOCIATION OF TAMILNADU
Affiliated to :
AEROSKATOBALL FEDERATION OF INDIA
Aeroskato Ball Association
Tamilnadu
No.8, First Floor, Erumbeeswarar Nagar,
Thiruverumbur,
Trichy - 620 013.Tamil Nadu.
SGF
INDIA
FIT
INDIA
Email : aeroskatoballtrichy@gmail.com
Cell : 9943805636, 9003096846

# போலீஸ் பார்வை

ஜுலை 2024 மலர் 9 இதழ் 9



**அச்சிட்டு வெளியிடுபவர்** : ஆசிரியர் **Dr.N.பாலகிருஷ்ணன்**

**ஆன்மீக ஆலோசகர்** : Dr.M.பாலகிருஷ்ணன் சுவாமி

**கௌரவ ஆசிரியர்** : நினைவில்... புலவர் தியாக சாந்தன்

**முதன்மை ஆசிரியர்கள்** : S.முருகானந்தம், K.ராம்சுரேஷ், K.T.சிவக்குமார் B.A.,B.L., மரு.கண்ணன்

**துணை ஆசிரியர்கள்** : N.இளங்கோவன், G.ஹரிகிருஷ்ணன், N.ஜீவானந்தம், B.சம்பத், G.ஸ்ரீனிவாசன், R.வெங்கடேஷ், V.பிரபு, S.சுந்தர்

**இணை ஆசிரியர்கள்** : K.ரவிச்சந்திரன், V.Vivek Bomb, U.மதனகோபால்

**சட்ட ஆலோசகர்கள்** : S.கோபாலமணிகண்டன் B.A., B.L., ML., மதுரை ஐகோர்ட், P.V.பிரகாஷ் B.A., B.L., V.சிவக்குமார் M.A., B.L. சென்னை ஐகோர்ட், Dr.V.S.முகம்மது சலீம் M.A., L.L.B., S.அண்ணாதுரை M.A., B.L., P.பார்த்திபன் M.Com., B.L., M.சபிதா BBA., B.L. S.ரவிச்சந்திரன் M.A., B.L.

**சிறப்பு ஆலோசகர்** : S.செய்த்அலி B.Sc., L.L.B.,

**தலைமை நிருபர்கள்** : S.வேல்முருகன், I.சகாயராஜ், P.பிரஸ்டன், S.ராஜன், I.கண்ணன், N.ஹரிதாஸ், மணிகண்டன் முருகதாஸ், N.ராக்கேஷ் சுப்பிரமணியன், K.கோவர்த்தனகிரி, S.ரமேஷ், K.மனோகரன், A.மாரிராஜா, P.ஜெகதீஷ், M.பாண்டியராஜன்

**சிறப்பு நிருபர்கள்** : SA.மகாதேவன், N.முரளிதரன், P.முத்துகுமரன், B.பாஸ்கரன், R.சக்திவேல், K.ரவிகிருஷ்ணன், S.R.காமராஜ், Dr.A.S.முகமது ஹுசேன், M.சசி, P.கௌரிஷங்கர், G.அழகுராஜ், KCM.சுரேஷ், S.மணிகண்டன், J.பீமராஜ், LNK.சந்தன், B.குணசேகரன், R.பழனிச்சாமி, K.பாபு, R.மணிமாறன்

**நிருபர்கள் குழு** : G.பாபு, K.ராஜசேகர், S.ராமச்சந்திரன், B.சிவக்குமார், B.சத்தியராஜ், R.சக்திவேல், R.குப்புசாமி, N.ராமசாமி, A.பெனியல்தேவபிரபு, S.சந்திரசேகரன், M.ரகு, N.சீனிவாசன், S.சிவக்குமார், K.அருணாச்சலம், S.ஜெயச்சந்திரன், R.வசந்த், R.விஷ்ணுமோகன், D.ஹரிஹரன், K.ராஜீவ்காந்தி, V.ஸ்ரீனிவாசராவ், E.பால்ராஜ், C.பாண்டியன், S.பாலமுருகன், K.இந்திரகுமார், A.ஜெயச்சந்திரன், G.சிவப்பிரகாசம், Dr.D.வெங்கடேஷ்வரா, H.நீலகண்டன், J.செல்வம், S.சிந்தாமணி விநாயகர், K.ரகு, U.தியாகராஜன், S.சரவணன், S.சிவராஜ், குஷால் K ஷர்மா, G.சதீஷ்குமார், Dr.S.ஹரிநாராயணன், K.A.சுரேஷ் கிருஷ்ணா, D.திவாகர், T.ஜெயபிரகாஷ், M.மணிவண்ணன், G.ராமமூர்த்தி, S.ஸ்ரீனிவாசன், M.சேகர், V.K.கண்ணன், P.அண்ணாமலை, N.மோஹனா, A.பாலமுருகன், V.சதிஷ், C.விஜயகுமார், D.லெட்சுமணன், R.தியாகராஜன், H.சுஜித்குமார், S.ஆனந்த், R.ராமநாதன், P.கருப்புசாமிபாண்டியன், U.செல்வகுமார், M.ஆனந்தகுமார், K.தங்கராஜ், T.ஆனந்த்குமார், M.முத்துசாமி, C. சிவகுருநாதன், AK.ஷாஜஹா, R.கோவிந்தசாமி, P.அசோக்குமார், S.விக்னேஷ், S.நவீன், M.ராஜகோபால், T.ஆலன்பே, B.சையத் முகமது மீரான், P.மணிமாறன், J.ஜெயவேல்முருகன், B.ரமேஷ்குமார், P.மஹேந்தர் புரோகித், R.கண்ணன், S.மணி, K.பாண்டியன், A.தண்டபாணி, G.சஜிக்குமார், C.இளங்கோ, V.முருகேசன், S.ஹரிஹரன் (எ) அய்யப்பன், SR.சுந்தரவேலு, L.பிரகாஷ், L.கலைவாணன், V.சண்முகராஜ், M.கவுசர், S.தியாகராஜன், R.சுமதி, A.குமரன், P.சதீஷ், R.ராஜேஷ், K.மாமுண்டிராஜன், M.மாதேஸ்வரன், S.லிங்கதுரை, AR.முருகேசன், R.ஸ்ரீதர், R.ராமலெக்ஷ்மி, R.ராகவேந்திரன், G.சதீஷ்குமார், P.தணிகைவேல், P.நடராஜ், S.ஆனந்த்குமார், K.சுரேஷ்குமார், B.பிரேம்குமார், J.ஆண்டன் ஆன்ஸ்ரூஸ் கிஷோர், G.V.ஜெகதீசன், N.நவீன்குமார், M.சஞ்சய், V.லெட்சுமணன், P.ஆறுமுகம், A.அலெக்ஸ், B.ஸ்ரீனிவாசன், V.கஜபதி, B.வெங்கடாசலம், P.தேவராஜ், SP.முகேஷ், ஷானவாஸ் அஹமத், A.அப்துல்காதர், முத்து ஜெயசேகர், M.முருகேசன், G.மணிகண்ட பிரபு, A.லியோ கிளமன்ட், S.அன்வர் தீன், L.லூயில் பெர்னான்டஸ், P.ராஜ ராமகிருஷ்ணன், R.தங்கபாண்டியன், R.கோபாலகிருஷ்ணன், V.ஆறுமுகச்சாமி, M.ஆறுமுகம், M.ரவி, S.சக்திவேல், K.கோபி, K.மாரிமுத்து, P.மணிகண்டன், S.கஜேந்திரவேல், E.கார்த்திக், SP.விமலேஸ்வரன், N.நபிமுகமது, குரு.சரவணன், V.கணேசன், R.வெங்கடேசன், V.ராதாகிருஷ்ணன், A.தாமஸ் அந்தோணி, B.மாரிமுத்து, I.வேளாங்கண்ணி



**அலுவலக முகவரி: 4B, GD.Floor, 4th Block Adilti Paradise, No.1, 2nd North Street, Poombuhar Nagar, Kolathur, Chennai-600 099. Cell: 9789491438, 7667551542 E.mail: editorpoliceparvai@gmail.com, Website.www.policeparvai.com**



All Rights Reserved Legal Jurisdiction Chennai City Court Only

Designed by: QUEEN BEE CREATIVE




# உயிர் பலி வாங்கும் மெத்தனால்... குடித்தால் என்ன நடக்கும்?

மெத்தில் ஆல்கஹால் என அழைக்கப்படும் மெத்தனால், எத்தனாலை விட அதிக நச்சுத்தன்மை கொண்டது. எளிதில் ஆவியாகக் கூடிய, தீப்பற்றக் கூடிய, நிறமற்ற மெத்தனால் எரிபொருளாகவும் உபயோகப்படுத்தப்படுகிறது. நீர் மற்றும் மெத்தனால் கலவை அதிக செயல்திறன் கொண்ட இயந்திரங்களில் உறைநிலையை குறைக்க பயன்படுத்தப்படுகிறது.

ஆடை தயாரிப்பு, பெயிண்ட் உற்பத்தி, பிளாஸ்டிக் உற்பத்தியில் உள்ளிட்ட தொழிற் சாலைகளில் முக்கிய மூலப் பொருளாக மெத்தனால் பயன்படுகிறது. மை, பிசின்கள், பசைகள் மற்றும் சாயங்களை உருவாக்க உதவும் ஒரு தொழில்துறை கரைப்பானாக மெத்தனால் பயன்படுத்தப்படுகிறது. மேலும் பெட்ரோலில் கூட துணை பொருளாக மெத்தனால் கலக்கப்பட்டுள்ளது.

மெத்தனால் பயன்பாட்டிற்கு கடுமையான விதிமுறைகள் பின்பற்றப்படுகின்றன. உரிமம் பெற்ற தொழில் நிறுவனங்கள் மட்டுமே இவற்றை பயன்படுத்த முடியும். மேலும் மெத்தனாலை வாங்குவது, பயன்படுத்துவது என அனைத்தையும் கண்காணிக்க தனி அமைப்புகள் உள்ளன. தொழிற் காரணங்களை தவிர்த்து பிற வகையான பயன்பாட்டிற்கு மெத்தனாலை பயன்படுத்துவது இந்தியாவில் தடை செய்யப்பட்டுள்ளது.

கள்ளச் சாராயத்திற்கும், விஷச் சாராயத்திற்கும் வித்தியாசம் இருக்கிறது. மதுவை அரசு அனுமதியில்லாமல், உரிமம் இல்லாமல் காய்ச்சி குடித்தால் அது கள்ளச்சாராயம். அதுவே, போதைக்காக மெத்தனால் கலக்கப்படும் போது விஷ சாராயமாகி விடும். எத்தனால் எனப்படும் எத்தில் ஆல்கஹால் தான் மது வகைகளில் இருக்கக் கூடியது. மெத்தனால் எனப்படும் மெத்தில் ஆல்கஹால் உயிருக்கே ஆபத்து விளைவிக்கக் கூடிய கொடிய விஷமாகும்.

குறிப்பிட்ட அளவுக்கு மேல் இவற்றை உட்கொள்ளும் மனிதர்களின் நியூரான்களில் கலக்கும் போது உயிரிழப்புகளுக்கான வாய்ப்புகள் அதிகம் என சொல்லப்படுகிறது.

மேலும், இவை மூளையின் செல்களை அழிப்பதால் மெத்தனாலை உட்கொள்ளும் போது நிரந்தரமாக கண்பார்வை பறிபோகும் ஆபத்து உள்ளது. மெத்தனால் அளவு அதிகமாக கலக்கப்படும் சாராயத்தை உட்கொள்ளுவதால் கண்பார்வை பறிபோவது, கல்லீரல் பாதிப்பு உள்ளிட்ட உடல் உறுப்புகள் பாதிக்கப்படுவதுடன் அதிகபட்சமாக உயிரிழப்புகளும் ஏற்படுகின்றன.

மெத்தனால் கலக்கப்பட்ட சாராயத்தை உட்கொள்வதுடன் உணவு, நரம்பு மண்டலங்களை சீர்குலைக்கும். வயிறும், குடலும் வெந்துவிடும். நரம்பு மண்டலம் வழியாக மூளைக்கு விஷத்தன்மை பரவி மூளை செல்களை அழித்து கண்பார்வையையும், செவித்திறனையும் பறித்துவிடும். மேலும், நுரை நுரையாக வாந்தி வரும், இந்த வாந்தி நுரையீரலை சென்றடைந்து மூச்சு விடமுடியாமல் தடுத்து உயிருக்கு பாதிப்பை ஏற்படுத்தும்.

**ஆசிரியர்**

## இதழ் நிர்வாகத்தின் முக்கிய அறிவுறுத்தல்...

போலீஸ் பார்வை மாத இதழில் இணைந்துள்ள நிருபர்கள், மற்ற பொறுப்பு வகிப்பவர்கள் என, எவரும் எந்த உள்நோக்கத்துடனும் சுய லாபத்திற்காக தவறாக செயல்பட நிர்வாகம் அனுமதிக்காது. மேலும், மீறி செயல்படுபவர்கள் பொறுப்பிலிருந்து நீக்கப்படுவார்கள்.



# தெய்வீக தியாகத்தின் மறுவடிவம்

# அன்னை தெரசா

நம் பாரத தேசம் ஒரு தெய்வீக தேசமாகும். தாயுள்ளம் கொண்ட அன்பு தேசமாகும். அனைத்து மத இறை அடியார்களும் நம் தேசத்தில் பிறந்து அன்பையும், தியாகத்தையும், ஞானத்தையும் விதைத்தார்கள்.

18 சித்தர்களும் ரிஷிகளும் மதச்சார்பற்று வாழ்ந்தார்கள். அவர்களில் சிவவாக்கியர், குதம்பை சித்தர் முதற்கொண்டு அவர்களின் ஞான வழியில் தக்கலை பீர்முகமது அப்பாவும், குணங்குடி மஸ்தான் சாகிபு சித்தர் அவர்களும், தமிழ்த் தொண்டு செய்த வீரமாமுனிவர் (கான்ஸ்டன்டைன் ஜோசஃப் பெஸ்கி) சித்தர் ஆகிய அனைத்து ஞான சித்தர்களும் இறை நிலையை உணர்ந்து தேன் தமிழில் ஞானப் பாடல்களை இயற்றி தெய்வத் தொண்டு செய்தவர்கள் ஆவார்கள்.

காலத்துக்கு ஏற்றவாறு அந்தந்த கால கட்டத்தில் தெய்வீக சேவை செய்யும் இறை அடியார்கள் நம் பாரத தேசத்தில் பிறந்து கொண்டே தான் இருக்கின்றார்கள். அந்த வழியில் தியாகத்தின் மறு உருவமான அன்னை தெரசாவும் நம் பாரத நாட்டில் சாதி மத பேதம் பார்க்காமல் அனைத்து ஏழை எளிய மக்களுக்கும் பசியையும் அவர்கள் தேவையையும் போக்கி அன்பால் அரவணைத்தவர். அவருடைய தியாக சேவையை நாம் பார்ப்போம்.

**புனித அன்னை தெரசாவின் பிறப்பு 1910**

தெய்வீக தாய் உள்லம் கொண்ட அன்னை தெரசா அவர்கள் மாசிடோனியாவில் உள்ள ஸ்கோப்ஜியில் 1910ல் பிறந்தவர் ஆவார். நிகோலா மற்றும் டிரோன்போஜாஜியுவுக்கு அன்பு மகளாக புனித அன்னை தெரசா பிறந்தார். இவருடைய இயற்பெயர் ஆக்னஸ் கோன்ஷா போஜாஜியு ஆகும்.

தெரசாவின் தந்தையின் திடீர் மரணத்தால் தாயின் அரவணைப்பில் வளந்து வந்தார். இளம் வயலிதேயே இயேசு கிறிஸ்துவின் அன்பால் ஈர்க்கப்பட்டவராவார். இயேசு கிறிஸ்துவின் அன்பால் வழிநடத்தப்பட்டார்.

அன்னை தெரசா இந்தியா வருகை

இளம் வயதிலேயே இயேசு கிறிஸ்துவின் அன்பை பரப்பினார். டப்ளினில் உள்ள கன்னி மேரி நிறுவனத்தில் சிலமாதங்கள் பயிற்சி எடுத்தார். இளம் வயதிலேயே இயேசு கிறிஸ்துவுக்காக தன் வாழ்க்கையை அர்ப்பணித்தார்.

லிசியக்ஸின் புனித தெராசிவின் பெயரால் சகோதரி மேரி என்ற பெயரைப் பெற்றார். பின்பு 1929-ம் ஆண்டு இந்தியா வந்தடைந்தார்.

கன்னி துறவியாக வாழ்ந்து மக்களுக்கு சேவை செய்ய சபதம் எடுத்துக் கொண்டார். 1931 -ல் இருந்து 1948 வரை அன்னை தெரசா கல்கத்தாவில் உள்ள புவியியல் கல்விகளையும் மற்ற கல்விகளையும் கற்பித்தார்.

1937-ல் இயேசு கிறிஸ்துவின் அன்பு வழியில் வாழ்ந்து மக்களுக்கு சேவை செய்ய தன்னை அர்ப்பணித்து சபதம் மேற்கொண்டார். அன்று முதல் அன்னை தெரசாவானர். பின்பு செயின்ட் மேரி பள்ளியில் முதல்வரானார்.

அனைவரிடமும் அன்பும் மனித நேயத்துடனும் பழகினார். அனைவருக்காகவும் இயேசு கிறிஸ்துவிடம் பிரார்த்தனை செய்தார். ரோமன் கத்தோலிக்க திருச்சபையில் இருந்து கொண்டு, இந்திய மக்களிடம்

அன்பை பரப்பினார். அவர் இந்தியக் குடியுரிமை பெற்றார். அன்புள்ள இந்தியரானார்.

புனித அன்னை தெரசா நம் பாரத நாட்டுக்கு கிடைத்த அன்பு நிறைந்த தெய்வீக பொக்கிஷமாகும். அனைத்து மக்கள் மீதும் பரிபூரணமான அன்பு கொண்டவர்.

## அன்னை தெரசாவின் மனித குல சேவை

தனது வாழ்க்கையை இயசு கிறிஸ்துவின் அன்பு வழிகாட்டுதலின்படி மக்களுக்கு சேவையாக பணியாற்றினார். இயேசு கிறிஸ்து அன்னை தெராசாவின் மனதில் ஆட்கொண்டு ஒவ்வொரு சத்தியத்தையும் வெளிப்படுத்தினார்.

ஆவியில் எளிமை உள்ளவர்கள் பாக்கியவான்கள் என்ற இயேசு கிறிஸ்துவின் புனித வாசகத்தை தன் ஆத்மாவில் ஏற்றுக் கொண்டவர் புனித அன்னை தெராசா.

கல்கத்தாவில் ஏழைகள் நோயாலும் வறுமையாலும் பாதிக்கப்படுவதைக் கண்டு உள்ளம் வேதனை அடைந்தார். என்னால் தனியாக இயங்க முடியாது. இயேசுவே என் ஒளியாக வா என்று பிரார்த்தனை செய்து கொண்டார். இந்திய மக்களின் வறுமையை ஒழிக்க விரும்பினார். ஏழைகள் கஷ்டப்படுவதை கண்டு தன் உள்ளத்தில் இரத்தக் கண்ணீர் வடித்தார்.

1948-ல் அவர் கான்வென்ட் பள்ளியை விட்டு வெளியேறினார். பின்பு கல்கத்தாவில் சேரிகளில் உள்ள ஏழை எளியோர்கள் மத்தியில் சேவை செய்ய தன்னை தயாராக்கிக் கொண்டார். தனது மேல் அதிகாரிகளின் அனுமதியை பெற்றார்.


1948-ல் முதன் முறையாக இந்திய கலாச்சாரபடி ஆடை உடுத்தினார். முதன் முறையாக வெள்ளை நீல நிற பார்டர் புடவையை உடுத்தி ஏழைகளின் அன்பான இதயத்திற்குள் நுழைந்தார்.

## ஏழைகளுக்கு பள்ளிகளையும் வீடுகளையும் உருவாக்கினார்

அன்னை தெரசா ஏழை எளியோர்கள் இருக்கும் இடத்தில் வசித்த தயார் ஆனார். அனைத்து குழந்தைகளுக்கும் கல்வி கற்றுக் கொடுத்த தொடங்கினணார். திறந்த வெளி பள்ளியை தொடங்கினார்.

மேலும் அவர், தேவாலய அமைப்புகளிடம் இருந்தும் தன்னார்வகளிடமும் பண உதவி பெறறு அடீை வறுமையில் வாடிய மக்களுக்காகவே பயன்படுத்தினார். வீடு இல்லாத ஏழைகளுக்கு வீடுகளைக் கட்டி கொடுத்தார். பசியோடு இருக்கும் ஏழைகளுக்கு உணவு அளித்து காப்பாற்றினார்.

ஆதரவற்ற அனாதை பிள்ளைகளுக்கும் முதியவர்களுக்கும் ஆதரவை அளித்து அன்பு செய்தார். இயேசு கிறிஸ்து அருளிய அன்னைப் போல் பிறரை நேசி என்ற தெய்வீக வாக்கிய போதனைகளை ஏற்றுக் கொண்டு ஏழை எளிய மக்களிடம் அன்பை பொழிந்தார். இதனால் இந்திய




மக்களின் பரிபூரண அன்பை பெற்றார்.

இந்திய மக்கள் அனைவரும் அவரை அரவணைத்து அன்பு செய்யும் அன்னையாக பார்த்து வணங்கினார்கள். ஏழை மக்களின் மகிழ்ச்சியே தன் மகிழ்ச்சியாக நினைத்து வாழ்ந்து வந்தார்.

## நோய்களை போக்கி பசியை நீக்குதல்

சேரியில் உள்ள அனைத்து வீடுகளுக்கும் சென்றார். ஏழைக் குழந்தைகளின் புண்களை தன் கையால் கழுவினார். பின்பு மருந்து போட்டு குணமாக்கினார். மனதில் எள்ளளவும் அருவருப்பின்றி பணியாற்றினார். கைவிடப்பட்ட முதியவர்களை அன்பாக பார்த்து அரவணைத்து அவர்களுக்கு உணவு அளித்தார். அனைத்து மக்களுக்கும் உணவு அளித்து பசியைப் போக்கினார்.

யாரும் கவனிக்காதவர்களும், கொடிய நோயால் யாபும் தொடப் பயப்படுபவர்களையும் இன்முகத்தோடு அவர்களை தொட்டு அவர்கள் கை, கால்களை கழுவி மருந்து கொடுத்து குணப்படுத்தினார். பின்பு

இவருடைய முன்னாள் மாணவர்கள் இவருடன் சேர்ந்து ஒவ்வொருவரும் சேவை செய்வதில் இணைந்தார்கள்.

கொடிய தொற்று நோய் உள்ளவர்களுடனும் தங்கி சிகிச்சை அளித்து குணப்படுத்தினார். பல லட்சக்கணக்கான ஏழை எளிய மக்கள் அன்னை தெரசாவால் பயன் அடந்தார்கள்.

அன்னை தெரசாவின் புனித சேவைக்காக அவருக்கு அமைதிக்கான நோபல் பரிசு கிடைத்தது. பாரத ரத்னா விருதும் கிடைத்தது. பல எதிரிகள் அவர் சேவையை எதிர்த்தாலும். அவர் அவர்களை அன்போடு எதிர் கொள்வார்.

தன்னார்வகளிடம் பல நாடுகளில் தன் வாங்கியை நிதியை ஏழை எளியோருக்காக பயன்படுத்தினஆர். இப்படி சேவை செய்து கொண்டு இருக்கும்போது, 1977-ல் தன் உடம்பை விட்டு ஆன்மாவை பிரித்தார். அவர் இயேசு கிறிஸ்துவுக்குள் விதைக்கப்பட்டார். அவர் இறந்ததும் அனைத்து நாடுகளில் உள்ள மக்களும் கண்ணீர் வடித்து அழுதார்கள். அவர் மரிக்கவில்லை. இயேசு கிறிஸ்துவுக்குள் விதைக்கப்பட்டார் என்று ஏழை எளிய மக்கள் நம்பி வணங்குகிறார்கள். அவரது உடல் கிறிஸ்தவ முறைப்படி அடக்கம் செய்யப்பட்டது.

நல்ல ஆன்மாக்கள் எந்த சாதியானாலும் எந்த மதமானாலும் போற்றப்பட வேண்டும்.தன்னலம் கருதாது பொது நலத்தில் வாழ்ந்தவர். தனக்காக எந்த மகிழ்ச்சியும் அனுபவிக்காமல் ஏழை எளிய மக்களுக்காகவே வாழந்தவர். இன்னும் அவருடைய புனித ஆன்மாக்களுக்கு அற்புதம் செய்து கொண்டு இருக்கின்றது.

இயேசு கிறிஸ்தவின் பெயராலும் அன்னை தெரதாவின் பெயராலும் இன்றும் பல கல்லூரிகளும், பல மருத்துவமனைகளும் பல ஆதரவற்ற குழந்தைகள் காப்பகமும் ஆதரவற்ற முதியோர் காப்பகமும் இயங்கி வருகின்றது. இன்றும் மக்ளுக்கு சேவை செய்து கொண்டு வருகிறது.

புனித அன்னை தெரசாவின் தியாக சேவையை மனதில் ஏற்றுக் கொண்டு ஏழை எளிய மக்களிடம் அன்புடனும் சேவை உள்ளத்துடனும் வாழ வேண்டும்.

**அன்னை தெரசாவின் பொன்மொழிகள்**

1, கருவுற்றால் ஒரு குழந்தைக்கு மட்டும் தான் அன்னையாக முடியும்;

கருணையுற்றால் ஆயிரம் குழந்தைகளுக்கு கூட அன்னையாக முடியும்...

2. அன்புதான் உன் பலவீனம் என்றால் இந்த உலகில் மிகச் சிறந்த பலசாலி நீதான்..

3. அன்பை மட்டும் கடன் கொடுங்கள், அது மட்டுமே அதிக வட்டியுடன் திரும்ப கிடைக்கும்..

4. தண்டனை கொடுப்பதற்கு தாமதம் செய், ஆனால் மன்னிப்பு கொடுப்பதற்கு யோசனை கூட செய்யாதே...

5.




கண்ணுக்குத் தெரிந்த மனிதனை மதிக்காவிட்டால், கண்ணுக்கு தெரியாத கடவுளை மதித்தும் பயன் இல்லை...

6. வெறுப்பது யாராக இருந்தாலும், நேசிப்பது நீங்களாக இருங்கள்...

7. இறக்கத்தான் பிறந்தோம், அதுவரை இரக்கத்தோடு இருப்போம்...

8. எப்போதும் புன்னகையுடன் ஒருவருக்கொருவர் சந்தித்துக் கொள்வோம், ஏனென்றால், புன்னகையே அன்பின் தொடக்கம்...

9. உங்களால் நூறு பேருக்கு உணவளிக்க முடியவில்லை என்றாலும், வெறும் ஒருவருக்காவது உணவளியுங்கள்...

**இயேசு காவியம் : கவிஞர் கண்ணதாசன்**

**ஏசுவின் மலைப்பொழிவு:**

வாயும் வயிறும் ஆசையில் விழுந்தால்
வாழ்க்கை பலைவனம்- அவர்
தூய மனத்தில் வாழ நினைத்தால்
எல்லாம் சோலை வனம்
இமைக்கும் போதில் ஆயிரம் போட்டி
எத்தனை வீண் கனவு- தினம்
இவை இல்லாது அணைதிகள் செய்தால்
இதயம் மலையளவு
சாந்தம் உடையோர் பேறுபெற்றோர் எனத்
தத்துவம் சொன்னார்- இந்த
தரணி முழுவதும் அவர்களுக்கு உரியது
தலைவர்கள் அவர் என்றார்.
மாந்தரின் வாழ்வில் தேவைப்படுவது
சாந்தம்தான் என்றார் - அது
மண்ணையும் ஆளும் விண்ணையும் ஆளும்
மகத்துவம் பார் என்றார்.







## தூத்துக்குடி மாவட்டம் காவல்துறை சார்பாக

# பொதுமக்கள் மாணவ மாணவிகளுக்கு மாற்றத்தைதேடி சமூக விழிப்புணர்வு நிகழ்ச்சி

தூத்துக்குடி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் டாக்டர் எல். பாலாஜி சரவணன் அவர்கள் உத்தரவின்படி சாத்தான்குளம் மற்றும் தூத்துக்குடி ஆகிய 2 அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் மற்றும் புதியம்புத்தூர் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட பகுதிகளில் மாணவ, மாணவிகள் உட்பட பொதுமக்களிடம் ‘‘மாற்றத்தை தேடி’’ என்ற சமூக விழிப்புணர்வு நிகழ்ச்சி மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு உறுதிமொழி எடுக்கப்பட்டது.

அதன்படி (02.07.2024) சாத்தான்குளம் அனைத்து மகளிர் காவல் நிலைய சார்பு ஆய்வாளர் திருமதி. பாமாபத்மினி மற்றும் போலீசார் சாத்தான்குளம் சிறப்பூர் கிராம பகுதியில் பொதுமக்களிடமும், தூத்துக்குடி அனைத்து மகளிர் காவல் நிலைய சிறப்பு சார்பு ஆய்வாளர் திருமதி. சாந்தி மற்றும் போலீசார் தூத்துக்குடி தஷ்நேவிஸ் பள்ளியில் மாணவிகளிடமும், புதியம்புத்தூர் காவல் நிலைய சார்பு ஆய்வாளர் திரு. சீதாராமன் மற்றும் போலீசார் புதியம்புத்தூர் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட மேலமடம் பகுதியில் பொதுமக்களிடமும் ‘மாற்றத்தை தேடி’’ விழிப்புணர்வு நிகழ்ச்சி மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.

இதுவரை 4015 ‘‘மாற்றத்தை தேடி’’ விழிப்புணர்வு கூட்டங்கள் காவல்துறையினர் மூலம் மாவட்டம் முழுவதும் நடத்தப்பட்டு சுமார் 1,31,260 பொதுமக்களிடம் தூத்துக்குடி மாவட்டத்தை குற்றமில்லாத மாவட்டமாக உருவாக்குவதற்கு 36, வகையான கருத்துக்களை வலியுறுத்தி உறுதிமொழி எடுக்கப்பட்டுள்ளது.

நிருபர்: S.அய்யப்பன் தூத்துக்குடி

# கோவை மாவட்டம் கஞ்சா சாக்லேட் வழக்கு 2 குற்றவாளிகள் மீது குண்டர் தடுப்பு சட்டம்

## SP பத்ரிநாராயணன் IPS நடவடிக்கை

கோவை மாவட்டம் கருமத்தம்பட்டி காவல் நிலைய பகுதியில் 9 கிலோ கஞ்சா சாக்லேட்டை விற்பனைக்கு வைத்திருந்த ஒடிசா மாநிலத்தைச் சேர்ந்த சனாதன் டோரா மகன் அபிஷேக் டோரா(30) மற்றும் அபிஷித் டோரா (27) ஆகியோர்களை பெரிய நாயக்கன்பாளையம் மதுவிலக்கு அமலாக்க பிரிவு காவல் துறையினர் கைது செய்து சிறையில் அடைத்தனர்.

மேலும் பொது ஒழுங்கு மற்றும் பொது சுகாதாரப் பராமரிப்பிற்கு பாதகமான செயலில் ஈடுபட்ட குற்றத்திற்காக அபிஷேக் டோரா(30) மற்றும் அபிஷித் டோரா (27) ஆகியோர்கள் மீது குண்டர் தடுப்பு சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்க கோவை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.பத்ரிநாராயணன், IPS., அவர்கள் பரிந்துரை செய்தார்.

அப்பரிந்துரையின் பேரில் கோவை மாவட்ட ஆட்சியர் திரு. கிராந்தி குமார் பாடி, IAS., அவர்கள் மேற்கண்ட நபர்கள் மீது குண்டர் தடுப்பு சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்க உத்தரவு பிறப்பித்தார். அவ்வுத்தரவின் அடிப்படையில் கஞ்சா சாக்லேட் வழக்கு குற்றவாளிகளான அபிஷேக் டோரா(30) மற்றும் அபிஷித் டோரா (27) ஆகியோர்களை குண்டர் தடுப்பு சட்டத்தின் கீழ் சிறையில் அடைத்தனர்.

மேலும் பொது அமைதிக்கு குந்தகம் விளைவித்தாலோ, பொது சுகாதார பராமரிப்பிற்கு பாதகமாக செயல்பட்டாலோ அவர்கள் மீது குண்டர் தடுப்பு சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்படும் என கோவை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்கள் எச்சரித்துள்ளார்.

இந்த வருடத்தில் இதுவரை கோவை மாவட்டத்தில்



35 நபர்கள் மீது குண்டர் தடுப்புச் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என *மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.பத்ரிநாராயணன் IPS அவர்கள் தெரிவித்துள்ளார்.

பொதுமக்கள் தங்களது பகுதிகளில் இதுபோன்ற குற்ற செயலில் ஈடுபடும் நபர்கள் குறித்து காவல்துறைக்கு தகவல் தெரிவிக்க 94981-81212 மற்றும் வாட்ஸ் அப் எண் 7708-100100 என்ற எண்ணிலும் தொடர்பு கொண்டு தகவல் தெரிவிக்கலாம் என்று பொதுமக்களுக்கு தெரிவித்துள்ளார்.

நிருபர்: P.நடராஜ் கோவை



## வியான முத்திரை

### (சம்மணமிட்டு இரு கைகளாலும் செய்க)

**சுட்டு விரலின் முனையையும் நடுவிரலின் முனையையும் பெரு விரலின் முனையோடு சேர்க்கவும். மற்ற விரல்களையும் தளர்வாக வைத்துக் கொள்ளவும். உயர் இரத்த அழுத்தம், தாழ் இரத்த அழுத்தம் இரண்டையும் சரி செய்யும். அதிக வியர்வை, மலம் நீர்த்து போதல், தாகம், சிறுநீர் அதிகம் போதல் ஆகியவை அகலும். தினமும் 10 நிமிடம் செய்க.**

# திருச்சி மாநகர காவல் துறை சார்பாக பொதுமக்கள் குறை தீர்ப்பு முகாம்

திருச்சி மாநகரத்தின் காவல் ஆணையர் திருமதி.N.காமினி, IPS அவர்கள், தமிழக அரசின் உத்தரவின்பேரில், பொதுமக்களின் குறைதீர்க்கும் வகையில் ஒவ்வொரு புதன்கிழமையும் பொதுமக்களிடமிருந்து நேரடியாக மனுக்களை பெற்று நடவடிக்கை எடுத்து வருகிறார்கள்.

அதன்படி, (03.07.2024)-ந்தேதி திருச்சி மாநகரம், கே.கே.நகர் ஆயுதப்படை சமுதாய கூடத்தில், பொதுமக்கள் சிறப்பு குறைதீர்ப்பு முகாம் மாநகர காவல் ஆணையர் திருமதி.காமினி IPS அவர்களின் தலைமையில் நடைபெற்றது.

பொதுமக்கள் இச்சிறப்பு முகாமிற்கு நேரில் வந்து கொடுத்த 53 மனுக்களை பெற்று, மனுக்கள் மீது உரிய தீர்வு காண சம்மந்தப்பட்ட காவல் நிலைய அதிகாரிகளுக்கு அனுப்பி, தக்க அறிவுரை வழங்கப்பட்டது.

மேலும் தமிழக முதல்வர் அவர்களால் தொடங்கப்பட்ட "மக்களுடன் முதல்வர்" முகாம், முதலமைச்சரின் தனிப்பிரிவு, காவல்துறை தலைமை இயக்குநரிடம் நேரடியாகவும், தபால், ஆன்லைன் மூலமாகவும் பொதுமக்கள் அளித்த 1,001 மனுக்கள் பெறப்பட்டு, 880 மனுக்களுக்கு தீர்வு காணப்பட்டு, மீதம் உள்ள 120 மனுக்கள் சம்மந்தப்பட்ட காவல் நிலையங்களின் மூலம் விசாரணை நடத்தி விரைவில் தீர்வு காண நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.



மேலும் இந்த ஆண்டு ஜனவரி மாதம் முதல் திருச்சி மாநகர காவல் ஆணையர் அவர்களிடம் சிறப்பு குறைதீர்ப்பு முகாமில் அளித்த 814 மனுக்களில் 478 மனுக்கள் மீது துரிதமாக தீர்வு காணப்பட்டும், மீதம் உள்ள மனுக்கள் மீது முறையான விசாரணை நடைபெற்று வருகிறது.

இம்முகாமில், காவல் துணை ஆணையர் வடக்கு மற்றும் தெற்கு, அனைத்து காவல் சரக உதவி ஆணையர்கள் மற்றும் காவல் ஆய்வாளர்கள் கலந்து கொண்டார்கள்.

சிறப்பு நிருபர்: சே.மணிகண்டன்






## திருநெல்வேலி SP சிலம்பரசன் தலைமையில்

# பள்ளி கல்லூரி மாணவர்களுக்கு போதைப் பொருள் ஒழிப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சி

திருநெல்வேலி மாவட்டத்தில் சர்வதேச போதைப்பொருள் ஒழிப்பு தினத்தை முன்னிட்டு திருநெல்வேலி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.N.சிலம்பரசன்., அவர்கள் உத்தரவின்படி, மாவட்டத்தில் உள்ள பள்ளி, கல்லூரி மாணவ, மாணவிகளுக்கும் மற்றும் பல்வேறு பகுதிகளில் உள்ள பொதுமக்களுக்கு போதைப்பொருள் தடுப்பு நடவடிக்கைகள் குறித்து விழிப்புணர்வு நடத்தப்பட்டது.

திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள



காவல்நிலையங்களின் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் உள்ள மாணவ, மாணவிகளுக்கு உட்கோட்ட துணை காவல் கண்காணிப்பாளர்கள் தலைமையில், காவல் ஆய்வாளர்கள் முன்னிலையில் விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது.

காவல்துறையினர் பள்ளி, கல்லூரிகளில் மாணவ, மாணவியர்களை நேரில் சந்தித்து போதை பொருள் பயன்படுத்துவதால் ஏற்படும் தீமைகள் குறித்தும் அதனால் ஏற்படும் விளைவுகள் குறித்தும் விழிப்புணர்வு ஏற்படுத்தியும் போதைப்பொருள் இல்லாத மாவட்டமாக திருநெல்வேலி மாவட்டத்தை உருவாக்க வேண்டும் என்றும் போதைப்பொருள் ஒழிப்பு உறுதிமொழி ஏற்கப்பட்டது.

பின்பு மாணவ மாணவிகள் போதை தடுப்பு நடவடிக்கைகள் குறித்து பதாதைகள் ஏந்தி நகரின் முக்கிய பகுதிகளில் விழிப்புணர்வு பேரணி நடத்தி பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.

நிருபர்: ஆறுமுகசாமி திருநெல்வேலி









# மதுரை கஞ்சாவிற்றவர்கள் கைது மாநகர காவல் துறையினர் அதிரடி

மதுரை மாநகர் கூடல் புதூர் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட பகுதியில் தமிழக அரசால் தடைஷு செய்யப்பட்ட கஞ்சாவை வைத்திருந்த இரண்டு நபர்களை கைது செய்து அவர்களிடம் இருந்து 3.5 கிலோ கிராம் கஞ்சாவை பறிமுதல் செய்த நுண்ணறிவுப் பிரிவை சேர்ந்த சார்பு ஆய்வாளர் திரு.முத்துராமன், தலைமை காவலர் 501 திரு.சுமன், கூடல் புதூர் காவல் நிலையத்தைச் சேர்ந்த சிறப்பு சார்பு ஆய்வாளர் திரு. வேல்முருகன், முநிகா. 2257 திரு.சிக்கந்தர், முநிகா. 897 திரு. பிரேம்குமார் ஆகியோரை மதுரை மாநகர காவல் ஆணையர் முனைவர் ஜெ.லோகநாதன் IPS., அவர்கள் நேரில் அழைத்து தனது வாழ்த்துக்களை கூறி பண வெகுமதியும் பாராட்டு சான்றிதழும் வழங்கி கௌரவித்தார்.

சிறப்பு நிருபர்: J.பீமராஜ் மதுரை

---

# குட்கா புகையிலை பொருட்கள் பறிமுதல் ஒட்டன்சத்திரத்தில் உணவு பாதுகாப்பு துறை அதிரடி

ஒட்டன்சத்திரம் அருகே வீட்டில் பதுக்கி வைத்திருந்த 300 கிலோ குட்கா மற்றும் புகையிலைப் பொருட்கள், கார் பறிமுதல் செய்து வீட்டுக்கு சீல் வைத்த உணவு பாதுகாப்பு துறை அதிகாரிகள்.

திண்டுக்கல், ஒட்டன்சத்திரம் அருகே நாகனம்பட்டியில் அரசால் தடை செய்யப்பட்ட குட்கா மற்றும் புகையிலை பொருட்கள் பதுக்கி வைத்து விற்பனை செய்வதாக திண்டுக்கல் உணவு பாதுகாப்புத்துறை அலுவலர் கலைவாணி அவர்களுக்கு கிடைத்த ரகசிய தகவலின் அடிப்படையில் உணவு பாதுகாப்புத்துறை அதிகாரிகள் செல்வம், சரவணகுமார், ஜஸ்டின், ஜாபர்சாதிக், முருகன் மற்றும் ஒட்டன்சத்திரம் டிஎஸ்பி முருகேசன் தலைமையிலான காவல்துறையினர் திடீர் சோதனை மேற்கொண்ட போது அப்பகுதியில் உள்ள ஒரு வீட்டில் ஹக்கீம்சேட் என்பவர் குட்கா பதுக்கி வைத்து விற்பனை செய்வது தெரிய வந்ததை அடுத்து அந்த வீட்டில் இருந்து 300 கிலோ குட்கா



மற்றும் புகையிலை பொருட்கள், கார் ஆகியவற்றை பறிமுதல் செய்து அந்த வீட்டிற்கு சீல் வைத்தனர். மேலும் இதுகுறித்து தப்பி ஓடிய ஹக்கீம் சேட்டை தீவிரமாக தேடி வருகின்றனர்.

நிருபர்: குரு.சரவணன் திண்டுக்கல்




காவல் கண்காணிப்பாளர் திரு.R.சிவபிரசாத் IPS அவர்கள் உத்தரவின் பேரில்

# மாணவர்களுக்கு போதைபொருள் ஒழிப்பு விழிப்புணர்வு போட்டிகள்

## தேனி மாவட்ட காவல்துறையின் சார்பில் நடைபெற்றது



சர்வதேச போதைப்பொருள் ஒழிப்பு தினத்தை முன்னிட்டு தேனி மாவட்ட காவல்துறையின் சார்பாக பள்ளி மாணவ மாணவியருக்கு போதைப்பொருள் ஒழிப்பு விழிப்புணர்வு போட்டிகள் நடைபெற்று வருகின்றன.

தேனி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.R.சிவபிரசாத் IPS அவர்கள் உத்தரவின் பேரில் போதைப்பொருள் ஒழிப்பு சம்பந்தமாக பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகிறது. அதன் தொடர்ச்சியாக சர்வதேச போதைப்பொருள் ஒழிப்பு தினத்தை முன்னிட்டு இன்று பள்ளி மாணவ, மாணவிகளுக்கு போதைப்பொருள் ஒழிப்பு மற்றும் அதனால் ஏற்படும் ஆபத்துகள் குறித்து கட்டுரைப்போட்டி, பேச்சுப்போட்டி, ஓவியப்போட்டி நடைபெற்றது. இதில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டது.

நிருபர்: R.குப்புசாமி தேனி

# காவலர்கள் உடல் நலத்தை பேணுவது போல், மன நலத்தை காப்பதிலும் முனைப்பு காட்ட வேண்டும்

## காவலர்களுக்கான 'மகிழ்ச்சி' வகுப்பில் SP திரு. E.சுந்தரவதனம் IPS அறிவுரை

கன்னியாகுமரி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் SP. திரு.E.சுந்தரவதனம் IPS அவர்கள் தலைமையில், காவல்துறையினரின் மன அழுத்தத்தை போக்கும் வகையில் தமிழ்நாடு அரசின் திட்டமான "மகிழ்ச்சி" வகுப்பு கன்னியாகுமரி மாவட்ட ஆயுதப்படையில் நடைபெற்றது.

இவ்வகுப்பில் பேசிய மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்கள் "காவலர்கள் உடல் நலத்தை பேணுவது போன்று மன நலத்தையும் பேணிக்காக்க முனைப்பு காட்ட வேண்டும் எனவும், இன்னும் நம்மிடையே மனநலம் காப்பது பற்றிய விழிப்புணர்வு போதுமானதாக இல்லை எனவும், உடலில் கேடு வரும்போது மருத்துவரை அணுகி சரி செய்வது போன்று மனநலம் காக்க தேவையான உதவிகளை எடுத்துக்கொள்ள தயங்கக்கூடாது" எனவும் அறிவுரைகள் வழங்கினார்கள்.

மேலும் காவலர்கள் மற்றும் காவலர் குடும்பங்களில் யாருக்கேனும் மனரீதியான பிரச்சனைகள் இருப்பின் மன நல ஆலோசனை பெற காவலர் குடும்ப நல மையத்தை உடனடியாக அணுக 7305033041 என்ற எண்ணை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்கள் அறிமுகம் செய்து வைத்தார்.




இப்பயிற்சி வகுப்பில் மனநல ஆலோசகர்கள் மற்றும் தலைமையிட கூடுதல் காவல் கண்காணிப்பாளர் திரு.சுப்பையா, சைபர் குற்றப்பிரிவு கூடுதல் காவல் கண்காணிப்பாளர் திரு.மோகன்தாஸ் மற்றும் துணை காவல் கண்காணிப்பாளர்கள், காவல் ஆய்வாளர்கள், உதவி ஆய்வாளர்கள், காவலர்கள் கலந்து கொண்டனர்.

நிருபர்: ஜெயவேல்முருகன் கன்னியாகுமரி







திருச்சி மாநகரத்தில் அதிகாலை செல்போன் பறிப்பில் ஈடுபட்ட

# 3 ரவுடிகளை விரட்டி பிடிக்க முயன்ற காவலருக்கு அரிவாள் வெட்டு

கடந்த சில நாட்களாக திருச்சி மாநகரத்தில் செல்போன், செயின் பறிப்பு சம்பவங்கள் அடுத்தடுத்து நடைபெற்று வந்த நிலையில், இதனை தடுக்க திருச்சி மாநகர காவல் ஆணையர் N.காமினி IPS அவர்கள் கடுமையான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்.

இந்த சூழலில் 29.06.24 அதிகாலை திருச்சி கலைஞர் அறிவாலயம் பகுதியில் மர்ம நபர்கள் செல்போன் பறிப்பில் ஈடுபட்டதாக வந்த தகவலையடுத்து, சத்திரம் பேருந்து நிலையம் பகுதியில் இரவு பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்த திருச்சி கோட்டை காவல் நிலைய முதல் நிலைக் காவலர் அப்துல் காதர் உள்ளிட்ட ஐந்துக்கும் மேற்பட்ட காவலர்கள் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்றனர். போலீசாரை கண்ட ரௌடிகள் மூவரும் அங்கிருந்து தப்பிவிட முயன்றனர். ஆனாலும் போலீசார் அவர்களை விடாமல் துரத்தி சென்று அண்ணா சிலை பகுதி அருகே பிடிக்க முயன்றனர்.

இதனால் ஆத்திரமடைந்த ரவுடிகளில் ஒருவன் தான் கையில் வைத்திருந்த கத்தியால் அப்துல் காதரின் வலது கை, கன்னத்தில் வெட்டியதில் படுகாயம் அடைந்த அவர் மயங்கி கீழே சரிந்தார். இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தி ரவுடிகள் மூவரும் தப்பியோடிவிட்டனர். இதுகுறித்து தகவல் அறிந்த காவல்துறை உயர் அதிகாரிகள் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்து விசாரணை மேற்கொண்டனர்.

மேலும் தப்பியோடிய மூவரையும் சுற்றி வளைத்து பிடிக்க உத்தரவிட்டதை தொடர்ந்து இந்த தாக்குதல் சம்பவத்தில் ஈடுபட்ட பாலாஜி, (வயது 17), சிலம்பு (வயது 16), நித்திஷ் (வயது 17) ஆகிய மூவரையும் கைது செய்து நடவடிக்கை எடுத்தனர்.

காவலர் மீதான தாக்குதல் சம்பவம் திருச்சி போலீசாரிடையே பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

சமீப காலங்களில் திருச்சி மாநகரத்தில் போலீசார் மீதான தாக்குதல் அதிகரித்து வருவதாக பொதுமக்கள் குற்றம்சாட்டுகின்றனர். காயம் பட்ட அப்துல் காதர் தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார்.

தலைமை நிருபர்: மு.பாண்டியராஜன் திருச்சி



## விருதுநகர் மாவட்டத்தில்

# பந்தல்குடி காவல் நிலையத்திற்கு தண்ணீர் சப்ளை நிறுத்திய ஊராட்சி மன்ற தலைவர்

விருதுநகர் மாவட்டம் அருப்புகோட்டை பந்தல்குடி காவல்நிலைநிலையத்தில்10, பெண்காவலர்கள் உள்ப்பட சுமார் 20,க்குமேர்பட்ட காவர்கள் மற்றும் காவல் அதிகாரிகள் பணியாற்றி வருகிறார்கள் இவர்களுக்கு அத்தியாவசிய தேவையான தண்ணீர் சப்ளை பந்தல்குடி ஊராட்சி மன்ற தலைவரால் (G. பாலாஜிபத்ரிநாத்) 6,மாதகாலமாக நிறுத்தப்பட்டுள்ளது.

காவல்நிலையத்திலிருந்து காரணம் கேட்டபொழுது உங்கள் காவல் நிலையத்துக்கு ரசீது போடவில்லை என்று காரணம் சொல்கிறாராம். அருகில் உள்ள காவலர் குடியிருப்பிலும் அதேநிலை தொடர்கிறது. மக்களை பாதுகாக்கும் பணியில் ஈடுபட்டு பணியாற்றி வரும் காவலர்களுக்கு அத்தியாவசிய தேவை தண்ணீர் அதைநிறுத்திவைத்து காரணங்கள்கூறும் ஊராட்சி மன்ற தலைவர் உட்பட மற்ற பொறுப்பிலுள்ள ஊராட்சி மன்ற குழுவினர் துறைரீதியாக நடவடிக்கை மேற்க்கொண்டு காவலர்களுக்கு தண்ணீர் சப்ளை




பிரச்சினைக்கு நிரந்தரதீர்வு காண உயர் அதிகாரிகள் மாவட்ட தாலுக்கா அதிகாரிகள் உடனடியாக நடவடிக்கை மேற்க்கொள்ள வேண்டும் என காவல் துறையினரோடு பொதுமக்களும் கோரிக்கை விடுத்துள்ளனர். தண்ணீர பிரச்சினைக்கு தீர்வு காணப்படுமா?

நிருபர்கள்: ஆனந்தகுமார், தனபால் செல்வகுமார், விருதுநகர்

# சென்னை விமான நிலையத்தில் ஆன்லைன் ஸ்கேமில் ஈடுபடும் நபர்களுக்கு சிம் கார்டு கடத்த முயன்றவர்கள் கைது

## காவல் குழுவினருக்கு ஆணையர் திரு.சந்தீப்ராய் ரத்தோர் IPS அவர்கள் பாராட்டு

திரு.அணில் குமார் AFRRO, Bureau of Immigration Chennai International Airport என்பவர் அளித்த புகாரில் 16,06,2024-ம் தேதி மலேசியா செல்வதற்கு சென்னை விமான நிலையம் வந்த Lee Tiek Yien என்பவரை சோதனை செய்தபோது எந்த ஒரு ஆவணமும் இல்லாமல் 22 சிம் (sim card) கார்டுகள் வைத்திருந்ததாகவும், விசாரித்ததில் ஆன்லைன் ஸ்கேமில் ஈடுபடும் நபர்களிடம் விற்பனை செய்ய எடுத்து செல்வதாகவும் அவருக்கு துணையாக கணேசன், முகமது மனாசீர், செயல்படுவதாகவும் எனவே மேற்படி நபர்கள் மீது நடவடிக்கை எடுக்க கோரி கொடுத்த புகாரில் சென்னை மத்திய குற்றப்பிரிவு மோசடி புலனாய்வு பிரிவில் (Forgery Intelligence Wing) வழக்கு பதிவு செய்து 1,Lee Tiek Yien என்பவரை கைது செய்து 17,06,2024 அன்று நீதிமன்ற காவலுக்கு அனுப்பப்பட்டார்.

மேலும் மேற்படி வழக்கில் உரிய விசாரணை மேற்கொண்டு மற்ற குற்றவாளிகளை கைது செய்ய சென்னை பெருநகர காவல் ஆணையர் திரு.சந்தீப்ராய் ரத்தோர் IPS அவர்கள் உத்தரவின் பேரில் மத்திய குற்றப்பிரிவு கூடுதல் ஆணையர் திருமதி. P.K. செந்தில் குமாரி IPS அவர்கள் ஆலோசனையின் பேரில் மத்திய குற்றப்பிரிவு துணை ஆணையர் திருமதி. N.S. நிஷா IPS அவர்களின் மேற்பார்வையில் மோசடி புலனாய்வு பிரிவு உதவி ஆணையர் திரு. சச்சிதானந்தம் அவர்கள் நேரடி கண்காணிப்பில் காவல் ஆய்வாளர் திருமதி. ஷீஜாராணி தலைமையிலான காவல் குழுவினர் தீவிர விசாரணை செய்து இவ்வழக்கில் தொடர்புடைய மற்ற குற்றவாளிகளான 2.கணேசன் (மலேசியா), 3.Tan



Ching Kun (மலேசியா), 4. மகேந்திரன் (மலேசியா), 5. முகமது மனாசீர் (குன்னூர்), 6.ராம் ஜெய் (சேலம்), 7.சூரிய பிரகாஷ் மதுரை, 8.ராஜ் பிந்தர் சிங் (பஞ்சாப்) ஆகியோரை 18.06.2024 அன்று கைது செய்து நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தனர்.

அவர்களிடமிருந்து 550 சிம் கார்டுகள், 2 லேப்டாப், 33 பேங்க் அக்கவுண்ட் பாஸ்புக், செக் புக், 20 ATM கார்டுகள், 23 மொபைல் போன்கள், BMW Car, Malasian Currency 5,485 Ringgits, Singapore Currency 95 Dollers ஆகியவை பறிமுதல் செய்யப்பட்டது.

விசாரணையில் மேற்படி குற்றவாளிகள் ஃபெடெக்ஸ் ஸ்கேம், டிரேடிங் ஸ்கேம், லோன் ஆப் ஸ்கேம் போன்ற இணைய வழி பண மோசடிகளில் பயன்படுத்துவதற்க்காக இந்த சிம்கார்டுகள் சட்டவிரோதமாக வெளிநாடுகளுக்கு அனுப்புவது தெரிய வந்தது. சென்னை பெருநகர காவல் ஆணையர் உத்தரவின் பேரில் மத்திய குற்றப்பிரிவு காவல் துறையினர் தீவிரமாக விசாரணை மேற்கொண்டு மேற்கண்ட ஆன்லைன் பண மோசடி குற்றவாளிகளை கைது செய்து சிறையில் அடைத்தமைக்கு சென்னை பெருநகர காவல் ஆணையர் திரு.சந்தீப்ராய் ரத்தோர் IPS அவர்கள் பாராட்டுகளை தெரிவித்தார்.

சிறப்பு நிருபர்: LNK.சந்தன் சென்னை





### திருச்சி மணல் திருட்டு மாபியா கும்பலுக்கு துணைபோன

# கொள்ளிடம் காவல் நிலைய காவல் துறையினர் கூண்டோடு ஆயுத படைக்கு மாற்றம்

## SP வருண்குமார் IPS அதிரடி நடவடிக்கை

திருச்சி மாவட்டம், லால்குடி உட்கோட்டம் நம்பர் 1 டோல்கேட் கொள்ளிடம் காவல்துறை எல்லையில் உள்ளது. கொள்ளிடம் ஆறு மற்றும் பங்குனி ஆற்றில் தினந்தோறும் இரவு நேரத்தில் மணல் மாபியா கும்பல் மணல் கொள்ளையடிப்பதாக பொதுமக்கள் கொள்ளிடம் போலீசாருக்கு தொடர்ந்து புகார் அளித்தள்ளனர்.

இந்நிலையில், அந்த புகாருக்கு கொள்ளிடம் போலீசார் நடவடிக்கை எடுக்காமல் மணல் கடத்தலில் ஈடுபடும் மணல் மாபியா கும்பலுக்கு ஆதரித்து பணம் பெற்றுக் கொண்டு கண்டும் காணமல் இருந்ததாக கூறப்படுகிறது.

அதேபோல், மணல் மாபியா கும்பலுக்கு எதிராக யாரேனும் புகார் அளித்தால் அந்த நபர்களை மணல் மாப்பியா கும்பலிடம் காட்டிக் கொடுப்பதாகவும் திருச்சி மாவட்ட SP. திரு.வருண் குமாரின் IPS தனி பிரிவுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது.

இதையடுத்து இச்சம்பவத்தில் ஈடுப்பட்ட கொள்ளிடம் காவல் நிலைய எஸ்ஐ மணிகண்டன் தவிர 25 போலீசாரையும் திருச்சி ஆயுதப்படைக்கு பணியிடை மாற்றம் செய்து SP. திரு.வருண்குமார்IPS அதிரடி நடவடிக்கை எடுத்துள்ளார்.

திருச்சி நம்பர் ஒன் டோல்கேட் கொள்ளிடம் காவல் நிலையத்தில் பணியாற்றிய எழுத்தர் சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் தலைமை காவலர் முதல்நிலை காவலர் இரண்டாம் நிலை காவலர் உள்ளிட்ட 25, காவலர்கள் கூண்டோடு அயுதப்படைக்கு மாற்றப்பட்டிருப்பது திருச்சியில் பரபரப்பு ஏற்படுத்தி உள்ளது. இது போன்ற குற்றம் மற்றும் கடத்தல் கும்பலுக்கு துணை போகும் காவலர்கள் மீது அதிரடி நடவடிக்கை எடுக்கப்படும் என எஸ்பி வருண்குமார் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

தலைமை நிருபர்: M.பாண்டியராஜன்





**செய்திகள் மற்றும் விளம்பரங்கள் அனுப்ப:**

editorpoliceparvai@gmail.com

செயல் அலுவலகம்: 14, 2-வது மாடி, எண்.4, MRG காம்ப்ளக்ஸ், போலீஸ் ஸ்டேஷன் அருகில், மெயின்ரோடு, எடமலைப்பட்டிபுதூர், திருச்சி - 620 012. 9789491438

## மாவட்ட ஆட்சியர் A.K.கமல் கிஷோர் IAS தலைமையில்

# தென்காசியில் மாற்றுத் திறனாளிகள் சிறப்பு குறைதீர் கூட்டம்

தென்காசி மாவட்டத்தில் மாற்றுத் திறனாளிகளுக்கான சிறப்பு குறைதீர்க்கும் நாள் கூட்டம் 04.07.2024 நடைபெற்றதை முன்னிட்டு மாவட்ட ஆட்சியர் A.K.கமல் கிஷோர் IAS வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், தென்காசி மாவட்டத்தில் மாற்றுத் திறனாளிகள் அனைவரும் அரசின் நல திட்டங்களுக்கு விண்ணப்பித்து பயன் பெற வேண்டி மாற்றுத் திறனாளிகளுக்கான சிறப்பு குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சியர் A.K.கமல் கிஷோர் IAS தலைமையில் மாவட்ட ஆட்சியரக கூட்டரங்கில் 04.07.2024 காலை 11:00 மணி அளவில் நடைபெற்றது.

மாற்றுத் திறனாளிகளுக்கான சிறப்பு குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் தென்காசி மாவட்டத்ததை சார்ந்த அனைத்து வகையான மாற்றுத் திறனாளிகள் அனைவரும் தங்களுக்குத் தேவையான உதவிகள் பெற மாற்றுத் திறனாளிகளுக்கான தேசிய அடையாள அட்டை நகல், குடும்ப அட்டை நகல், ஆதார் அட்டை நகல், வாக்காளர் அட்டை நகல் ஆகியவற்றுடன் விண்ணப்பித்து பயன் பெறலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் A.K.கமல் கிஷோர் IAS தெரிவித்துள்ளார்.



நிருபர்: K.அருணாச்சலம் தென்காசி


# இனிமேலா கள்ளச்சாராயம் காய்ச்சி விற்க அனுமதிக்கமாட்டோம்

## ஆட்சியர், SP முன்னிலையில் பச்ச மலை கிராமமக்கள் உறுதிமொழி

திருச்சி மாவட்டம் துறையூர் வட்டம் பச்சமலை பகுதியில் சட்டவிரோதமாக கள்ளச் சாராயம் காய்ச்சுவதாக கிடைத்த தகவலின் பேரில் மாவட்ட ஆட்சியர் மா.பிரதீப் குமார், IAS மாவட்ட காவல் கண்காணிப்பாளர் SP வீ.வருண்குமார் IPS ஆகியோர் தலைமையில் போலீஸார் பச்சமலைப் பகுதிக்கு சென்று ஆய்வு மேற்கொண்டனர்.

அங்குள்ள நெசக்குளம் கிரமத்தில் இருந்த 250 லிட்டர் கள்ளச் சாராயத்தை கீழே ஊற்றி அழித்தனர். அதனைத் தொடர்ந்து அப்பகுதி மக்களை அழைத்து கள்ளச் சாராயத்தின் தீமைகளை எடுத்துக் கூறினர்.

இதனைத் தொடர்ந்து அக்கிராமத்தைச் சேர்ந்த அனைவரும் மாவட்ட ஆட்சியர் முன்பாக மது போதைக்கு எதிராக இனி ஒருபோதும் எங்கள் கிராமத்தில் கள்ளச் சாராய உற்பத்தி நடக்காது அதனை அனுமதிக்க மாட்டோம் என உறுதிமொழி எடுத்துக் கொண்டனர். இதில் ஏராளமான காவலர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



தலைமை நிருபர்: M.பாண்டியராஜன்




# கொடைக்கானலில் காவல்துறை சார்பில் போதைபொருள் தடுப்பு விழிப்புணர்வு பேரணி

தமிழகத்தில் பல்வேறு பகுதிகளில் போதை தடுப்பு விழிப்புணர்வு பேரணியானது நடைபெற்று வருகிறது. இந்த நிலையில் திண்டுக்கல் மாவட்டம் கொடைக்கானலில் காவல் துறையின் சார்பில் போதை தடுப்பு விழிப்புணர்வு பேரணியானது நடைபெற்றது.

பேரணியானது ஏரிச்சாலை பகுதியில் இருந்து துவங்கியது. இதனை காவல்துறை துணை கண்காணிப்பாளர் திருமதி.மதுமதி மற்றும் காவல் ஆய்வாளர் திரு.பாஸ்கரன் துவங்கி வைத்தனர். இதில் பள்ளி மாணவர்கள் திரளாககலந்து கொண்டனர். பொதுமக்கள் மற்றும் சுற்றுலா பயணிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் ஊர்வலமாக ஏரிச்சாலை பகுதியில் இருந்து பேருந்து நிலைய பகுதி, அண்ணா சாலை வழியாக மூஞ்சிக்கல் பகுதி வரை சென்றனர்.

தொடர்ந்து போதைபொருள் உபயோகத்தை ஒழிப்போம் எனவும் மது அருந்தி வாகனம் ஓட்டக்கூடாது எனவும் கோஷமிட்டனர். இந்த நிகழ்வில் சுமார் நூற்றுக்கும் மேற்பட்ட மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

நிருபர்: R.குப்புசாமி கொடைக்கானல்

செய்திகள் மற்றும் விளம்பரங்கள் அனுப்ப:
editorpoliceparvai@gmail.com
செயல் அலுவலகம்: 14, 2-வது மாடி, எண்.4, MRG காம்ப்ளக்ஸ்,
போலீஸ் ஸ்டேஷன் அருகில், மெயின்ரோடு, எடமலைப்பட்டிபுதூர்,
திருச்சி - 620 012. 9789491438

# ஆனி மாத பௌர்ணமி 2024

# இப்படி விளக்கேற்றி பாருங்க, கேட்ட வரம் கிடைக்கும்

ஆனி மாதம் பலவகையிலும் சிறப்புக்குரிய மாதமாகும். பெருமாள் கூர்ம அவதாரம் எடுத்ததும், சிவ பெருமானுக்கு திருமஞ்சனம் நடப்பது இந்த ஆனி மாதத்திலும் தான். கோடை முடிந்து, வசந்த காலத்தின் துவக்கமாக இருக்கும் ஆனி மாதம் தட்சிணாயன காலத்தின் கடைசி மாதம் ஆகும். இது தேவர்களின் மாலை நேரமாக சொல்லப்படுகிறது. இந்த மாதத்தில் வரும் பௌர்ணமி மிகவும் சிறப்பு வாய்ந்ததாகும். பொதுவாகவே பௌர்ணமியில் சிவ பெருமானை வழிபடுவது சிறப்புக்குரியதாகும். அதுவும் ஆனி மாதத்தில் வரும் பௌர்ணமி அதிக வாய்ந்தது. இந்த ஆண்டு வெள்ளிக்கிழமையில் பௌர்ணமி இணைந்து வருவதால் ஆனி மாத பௌர்ணமி நாள் கூடுதல் சிறப்பு பெற்றுள்ளது. இந்த நாளில் வீட்டின் பூஜை அறையில் விளக்கேற்றி வழிபட்டால் கேட்ட வரங்கள் அனைத்தும் கிடைக்கும் என்பது நம்பிக்கை. ஒவ்வொரு மாதங்களிலும் வரும் பௌர்ணமி மிகவும் முக்கியமான வழிபாட்டு நாளாகும். இருந்தாலும் கார்த்திகை, தை, சித்திரை உள்ளிட்ட சில மாதங்களில் வரும் பௌர்ணமியை மட்டும் தான் நாம் முக்கியமானதாக கருதி வழிபடுகிறோம். அந்த வரிசையில் ஆனி மாதத்தில் வரும் பௌர்ணமியும் மிகவும் முக்கியமானதாகும். ஆனி மாதம் என்பது தட்சிணாயன காலத்தின் கடைசி மாதம் என்பதால் இந்த மாதத்திலண் வரும் பௌர்ணமியும் தட்சிணாயன காலத்தில் வரும் கடைசி பௌர்ணமி என்பதால் சிவ பெருமான், விநாயகர், துர்க்கை அம்மன் ஆகியோரை வழிபட மிகவும் சிறப்பானதாகும்.

உத்திராயணப் புண்ணிய காலத்தின் கடைசி மாதம் ஆனி. இது தேவர்களின் மாலைப் பொழுது என்கிறது சாஸ்திரம். மேலும் ஆனிமாதம் இளவேனிற் காலம். கோடையின் தாக்கம் நீங்கி இதமான காற்று வீசும். 'த்ரிஜேஷ்டை' என்று ஜோதிட அறிஞர்கள் சொல்வார்கள். உண்மையான அர்த்தத்தைத் தெரிந்து கொள்ளாது தலைச்சனுக்குத் தலைச்சன் ஆகாது என்று பொத்தாம் பொதுவாய் சொல்லி விடுகிறோம்.

ஜேஷ்ட மாதம் என்றழைக்கப்படும் இந்த ஆனி மாதத்தில் வரும் கேட்டை நட்சத்திர நாளில் ஜேஷ்டாபிஷேகம் என்ற விழா ஆலயங்களில் நடைபெறும். குறிப்பாக பழனியில் ஜேஷ்டாபிஷேகம் வெகு பிரபலம். கேட்டை நட்சத்திரத்திற்கு ஜேஷ்டா நட்சத்திரம் என்று பெயர். இந்த நட்சத்திரத்திற்கு உரிய தேவதை இந்திரன் என்கிறது வேதம். தேவர்களின் ஜேஷ்டனான, அதாவது, மூத்தவனான, தலைமைப் பொறுப்பு வகிக்கின்ற இந்திரன் தனது தலைமைப் பொறுப்பினை தக்க வைத்துக் கொள்ளவும், தலைமைப் பொறுப்பினை நிர்வகிக்கின்ற திறனை புதுப்பித்துக் கொள்ளவும், இறைவனுக்கு நன்றி செலுத்தும் விதமாகவும் விசேஷ அபிஷேக ஆராதனைகள் செய்து வழிபடுகின்ற நாள், இந்த ஆனி மாதத்தில் வருகின்ற கேட்டை நட்சத்திர நாள் ஆகும். இந்த நாளில் உயர் பதவியில் உள்ள அரசியல்வாதிகள், அரசு அதிகாரிகள், பெரிய நிர்வாகத்தைக் கட்டி ஆளும் தொழில் அதிபர்கள் யாவரும் அருகில் உள்ள ஆலயத்தில் ஆண்டவனுக்கு விசேஷ அபிஷேகத்துடன் கூடிய பூஜைகள் செய்து வழிபட்டால் அவர்களது நிர்வாகம் செழிக்கும் என்பது நிதர்சனமான உண்மை. அண்ட வெளியை ஆய்வு செய்கின்ற அமெரிக்க விஞ்ஞானிகளும் கூட அம்பலத்தில் ஆடுகின்ற ஆடலரசனை, நடராஜப் பெருமானை 'அஸ்ட்ரானமி' எனப்படும் ஆகாய அறிவியலின் ஆண்டவனாக ஏற்றுக்கொள்கின்றனர்.

நீர், நிலம், நெருப்பு, காற்று, ஆகாயம் ஆகிய பஞ்சபூத தலங்களில் ஆகாய தலம் ஆக விளங்குவது சிதம்பரம். சிதம்பரம் நடராஜப் பெருமான் ஆலயத்தில் வருடத்திற்கு இரண்டு முறை பிரம்மோற்சவம் நடக்கும். மார்கழி மாதத்தில் வரும் திருவாதிரை நட்சத்திரத்தை மையமாகக் கொண்டு ஆருத்ரா தரிசனப் பெருவிழாவும், ஆனி மாதத்தில் வரும் உத்திர நட்சத்திரத்தை மையமாகக் கொண்டு ஆனித் திருமஞ்சனத் திருவிழாவும் ஒவ்வொரு வருடமும் நடைபெறும். இவ்விரு நாட்களிலும் நடராஜப்பெருமான் ஆயிரங்கால் மண்டபத்தில் இருந்து ஆடிக்கொண்டே கனக சபைக்குள் எழுந்தருளும் தரிசனக் காட்சியினைக் காண பல்லாயிரக்கணக்கான மக்கள் கூடியிருப்பர்.

ஆனித் திருமஞ்சன நாள் அன்று சூரியன் மிதுன ராசியிலும், சூரியனின் நட்சத்திரமான உத்திரத்தில், அதாவது, கன்னி ராசியில் சந்திரனும் சஞ்சரிப்பர். பஞ்சாங்கத்தை நிர்ணயிக்கின்ற இவ்விரு கோள்களும் மிதுனம், கன்னி ராசிகளில் சஞ்சரிக்கும் நேரமே ஆனித் திருமஞ்சன நாள். மிதுனம், கன்னி ஆகிய இரண்டு ராசிகளுமே புதன் கிரகத்தின் ஆளுமை பெற்ற ராசிகள். கல்விக்கு அதிபதி புதன். அதிலும் வானவியல் அறிவினைத் தருவது புதன். ஆனித்திருமஞ்சன நாளில் நடராஜப் பெருமானை தரிசிக்க வானவியல் ஆய்வாளர்கள் நிறைய பேர் வருவதை நாம் இன்றும் காண முடியும்.

ஆனி மாதத்தில் வானம் தெள்ளத் தெளிவாகக் காட்சியளிக்கும். இதன் காரணமாகவே சென்னையில் அமைந்துள்ள பிர்லா கோளரங்கம், வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் அருகில் உள்ள ஆலங்காயம் உள்பட அனைத்து வானவியல் ஆய்வு மையங்களிலும் இந்த ஆனி மாதத்தில் ஆராய்ச்சியாளர்கள் ஓய்வின்றி செயல்படுவர். பொதுவாகவே எந்த ஒரு விஷயத்தையும் மேலோட்டமாக அணுகாமல், அதனை ஆழ்ந்து ஆராயும் பக்குவத்தைத் தருபவர் புதன். அதனால்தான் அவரது ஆட்சியினைப் பெற்ற மிதுனம், கன்னி ராசிக்காரர்கள் இயற்கையிலேயே ஆராய்ச்சி செய்யும் குணத்தினைப் பெற்றிருப்பர். ஆக, அவரது ராசிகளில் ஆன்மகாரகன் ஆகிய சூரியனும், மனோகாரகன் ஆகிய சந்திரனும் சஞ்சரிக்கும் இந்த ஆனித் திருமஞ்சன நாள் ஆய்வாளர்களுக்கு மிகவும் உகந்த நாள் ஆகும். புதனுக்கு உரிய மிதுன ராசியில் சூரியன் சஞ்சரிக்கும் இந்த ஆனி மாதம் அறிவியல் மட்டுமல்லாது அனைத்துத் துறைகளிலும் ஆழ்ந்த அறிவினைத் தரும் மாதமாக அமைந்துள்ளது என்றால் அது மிகையில்லைமை, அனுபவபூர்வமான உண்மை.

## மேஷம்

மேஷ ராசி அன்பர்களே!

தேவையான அளவுக்கு பணவரவு இருந்தாலும், சேமிக்க முடியாதபடி செலவுகள் ஏற்படும். சிலருக்கு சிறிய அளவில் மருத்துவச் செலவுகள் ஏற்படக்கூடும். கணவன் - மனைவிக் கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். மற்றவர்கள் உங்களைப் பற்றி அவதூறாகப் பேசினாலும் பொறுமையைக் கடைப்பிடிப்பது அவசியம். அலுவலகத்தில் வேலைச் சுமை அதிகரிக்கும். சக ஊழியர்களிடம் அனுசரித்து நடந்து கொள்வது அவசியம். உங்கள் வேலைகளை மற்றவர்களிடம் ஒப்படைக்கவேண்டாம். வியாபாரத்தில் விற்பனை வழக்கம் போலவே நடைபெறும். சக வியாபாரிகளுடன் பிரச்னைகள் ஏற்படக்கூடும் என்பதால் எச்சரிக்கையாக நடந்துகொள்ளவும். குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்மணிகளுக்கு செலவுகள் அதிகரிப்பதால் சிரமம் ஏற்படும். வேலைக்குச் செல்லும் பெண்மணிகளுக்கு பணிகளில் மிகுந்த கவனம் தேவை.

**வணங்கவழிபடவேண்டிய தெய்வம்: அம்பிகை வழிபடுவது நல்லது | ஸ்லோகம்: பூத்தவளே புவனம் பதினான்கையும் பூத்தவண்ணம் காத்தவளே பின் கரந்தவளே கறைகண்டனுக்கு மூத்தவளே என்றும் மூவா முகுந்தற்கு இளையவளே மாத்தவளே உன்னை அன்றி மற்றோர் தெய்வம் வந்திப்பதே இந்தபாடலை 27 முறை பாராயணம் செய்யவும். பரிகாரம்: தினமும் காலையில் வீட்டு பூஜையறையில் தீபம் ஏற்றி வழிபடுவது நல்லது. சந்திராஷ்ட்டமம் : ஆனி மாதம் 32 ம் தேதி செவ்வாய்க்கிழமை 16/7/2024 மாலை 6.35 முதல் ஆடி மாதம் 2ம் தேதி வியாழக் கிழமை 18/7/2024 இரவு 2.51 மணி வரை**

## ரிஷபம்

**ரிஷப ராசி அன்பர்களே!**

பணவரவு திருப்தி தருவதாக இருக்கும். ஆனால், எதிர்பாராத செலவுகளும் ஏற்படக் கூடும் என்பதால் சிறிது கடன் வாங்கவும் நேரிடும். கணவன் - மனைவிக்கிடையே ஏற்பட்டிருந்த பிரச்னைகள் மறைந்து மகிழ்ச்சி உண்டாகும். கடன்கள் விஷயத்தில் சற்று கவனமாக இருப்பது நல்லது. அலுவலகத்தில் எதிர்பார்த்த பதவி உயர்வு மற்றும் சம்பள உயர்வு கிடைக்கும். சிலருக்கு புதிய பொறுப்புகள் வந்து சேரும். பணியில் ஸ்திரத் தன்மை உண்டாகும். வியாபாரத்தில் விற்பனையை அதிகரிக்க சற்று கூடுதலாக உழைக்கவேண்டி இருக்கும். உழைப்புக்கேற்ற லாபம் கிடைப்பதால் உற்சாகம் உண்டாகும். குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்மணிகளுக்கு சிரமம் எதுவும் ஏற்படுவதற்கில்லை. வேலைக்குச் செல்லும் பெண்மணிகளுக்கு மகிழ்ச்சியான வாரம்.

**வணங்கிவழிபடவேண்டிய தெய்வம்: முருகப் பெருமானை வழிபடுவது நல்லது. | ஸ்லோகம்: உருவாய் அருவாய், உளதாய் இலதாய் மருவாய் மலராய், மணியாய் ஒளியாய்க் கருவாய் உயிராய்க், கதியாய் விதியாய்க் குருவாய் வருவாய், அருள்வாய் குகனே. பாடலை 27 முறை பாராயணம் செய்யவும்.| பரிகாரம்: தினமும் காலையில் வீட்டு பூஜையறையில் நெய்தீபம் ஏற்றி வழிபடவும் சந்திராஷ்ட்டமம் : ஆடி மாதம் 2ம் தேதி வியாழக்கிழமை 18/7/2024 இரவு 2.51 மணி முதல் ஆடி மாதம் 5ம் தேதி ஞாயிற்றுக் கிழமை 21/7/2024 காலை 8.37 மணி வரை**

## மிதுனம்

**மிதுன ராசி அன்பர்களே!**

வருமானம் திருப்தி தருவதாக இருந்தாலும், தேவையற்ற செலவுகள் ஏற்படும். ஆனால், சுபச்செலவாக இருப்பது ஆறுதல் தரும். திருமண முயற்சிகள் சாதகமாக முடியும். கணவன் - மனைவிக்கிடையே கருத்துவேறுபாடுகள் ஏற்பட வாய்ப்புள்ளதால் பொறுமை அவசியம். வழக்குகளில் இருந்து வந்த பிற்போக்கான நிலை மாறி, சாதகமான தீர்ப்பு கிடைக்கும். அலுவலகத்தில் உங்களின் திறமை வெளிப்படும். உயர்ந்த பதவி தேடி வரும். சம்பள உயர்வும் கிடைக்கும். சக ஊழியர்களிடம் எச்சரிக்கையாக இருக்கவும். வியாபாரத்தில் விற்பனையும் லாபமும் அதிகரிக்கும். பற்று வரவு சுமுகமாக நடை பெறும். வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும். குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்மணிகளுக்கு வீட்டுச் செலவுகள் அதிகரிக்கும். வேலைக்குச் செல்லும் பெண்மணிகளுக்கு அலுவலகத்தில் சலுகைகள் கிடைக்கும்.

**வணங்கிவழிபடவேண்டிய தெய்வம்: பெருமாளை வழிபடுவது நல்லது | ஸ்லோகம்: குலம்தரும் செல்வம் தந்திடும் அடியார் படுதுயராயின வெல்லம்,நிலந்தரஞ் செய்யும் நீள்விசும்பருளும் அருளொடு பெருநிலமளிக்கும், வலந்தரும் மற்றுந்தந்திடும் பெற்ற தாயினு மாயினசெய்யும், நலந்தருஞ்சொல்லை நான் கண்டுகொண்டேன் நாராயணா வென்னும் நாமம் பாடலை 27 முறை பாராயணம் செய்யவும் | பரிகாரம்: தினமும் காலையில் வீட்டு பூஜையறையில் நல்ல எண்ணை தீபம் ஏற்றி வழிபடுதல் நல்லது | சந்திராஷ்ட்டமம் : ஆடி மாதம் 5ம் தேதி ஞாயிற்றுக்கிழமை 21/7/2024 காலை 8.37 மணி முதல் ஆடி மாதம் 7ம் தேதி செவ்வாய்கிழமை 23/7/2024 பகல் 12.26 மணி வரை**

## கடகம்

**கடக ராசி அன்பர்களே!**

பணவரவுக்குக் குறைவில்லை. அதேசமயம் சில தேவையற்ற செலவுகளும் ஏற்படக் கூடும். அவசியத் தேவை என்றாலும்கூட இப்போது கடன் வாங்க வேண்டாம். திருப்பிக் கொடுப்பதற்குச் சற்று கடினமாக இருக்கும். உடல் ஆரோக்கியத்தில் சற்று கவனம் தேவை. பால்ய நண்பர்கள் உங்கள் மனதுக்கு ஆறுதலாக இருப்பார்கள். அலுவலகத்தில் உங்கள் பணிகளில் கூடுதல் கவனம் தேவை. இப்போதைக்கு சலுகைகள் எதையும் எதிர்பார்க்கமுடியாது. சிலருக்கு இட மாறுதல் கிடைப்பதற்கும் வாய்ப்பு உள்ளது. வியாபாரத்தில் எதிர்பார்க்கும் லாபம் கிடைக்காது. வியாபாரம் அபிவிருத்தி அடைய கூடுதலான முயற்சியும் உழைப்பும் தேவை. குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்மணிகளுக்கு செலவுகளால் சற்று சிரமப்படவேண்டி இருக்கும். வேலைக்குச் செல்லும் பெண்மணிகள் அலுவலகத்தில் சலுகைகள் எதையும் எதிர்பார்க்கமுடியாது.

**வணங்கி வழிபட வேண்டியதெய்வம்: தட்சிணாமூர்த்தியை வழிபடுவது நல்லது | ஸ்லோகம் :மாசில் வீணையும் மாலை மதியமும் வீசு தென்றலும் வீங்கிள வேனிலும் மூசு வண்டறை பொய்கையும் போன்றதே ஈசன் எந்தை இணையடி நீழலே இந்த பாடலை 27 முறை பாராயணம் செய்யவும் | பரிகாரம்: தினமும் காலையில் வீட்டு பூஜையறையில் நல்லெண்ணை தீபம் ஏற்றி வழிபடுதல் நல்லது | சந்திராஷ்ட்டமம்: ஆடி மாதம் 7ம் தேதி செவ்வாய்கிழமை 23/7/2024 பகல் 12.27 மணி முதல் ஆடி மாதம் 9ம் தேதி வியாழக்கிழமை 25/7/2024 மாலை 3.05 மணி வரை**

## சிம்மம்

**சிம்ம ராசி அன்பர்களே!**

எதிர்பார்த்த பணவரவு கிடைக்கும். தேவையற்ற செலவுகள் இருக்காது. திருமண வயதில் உள்ளவர்கள் வரன் தேடும் முயற்சியில் ஈடுபடலாம். நல்ல வரன் அமைவதற்கு வாய்ப்பு உள்ளது. கணவன் – மனைவிக்கிடையே சிறு அளவில் கருத்து வேறுபாடு ஏற்பட்டு உடனே சரியாகிவிடும். சகோதர வகையில் சுபச்செலவுகள் ஏற்பட வாய்ப்பு உள்ளது.

அலுவலகத்தில் இதுவரை இருந்த பணி நெருக்கடி இப்போது சற்று குறையும். அதனால் மனதில் உற்சாகம் ஏற்படும். புதிதாக வேலைக்கு முயற்சி செய்பவர்களுக்கு சாதகமான பதில் கிடைக்கும். வியாபாரம் எதிர்பார்த்தபடியே நடக்கும். கடையை வேறு இடத்துக்கு மாற்ற நினைத்தால் அதற்கான முயற்சிகளில் இந்த வாரம் ஈடுபடலாம்.

குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்மணிகளுக்கு மகிழ்ச்சியான வாரம். அக்கம்பக்கத்தில் இருப்பவர்களுடன் இணக்கமான சூழ்நிலை நிலவும். வேலைக்குச் செல்லும் பெண் மணிகளுக்கு அலுவலகத்தில் உற்சாகமான சூழ்நிலை காணப்படும்.

**வணங்கி வழிபடவேண்டிய தெய்வம்: சூரியனை வழிபடுவது நல்லது | ஸ்லோகம்: சுற்றமொடு பற்றவை துயக்கற அறுத்துக் குற்றமில் குணங்களொடு கூடும்அடி யார்கள் மற்றவரை வானவர்தம் வானுலக மேற்றக் கற்றவனிருப்பது கருப்பறியலூரே. பாடலை 27 முறை பாராயணம் செய்யவும். | பரிகாரம்: தினமும் காலையில் வீட்டு பூஜையறையில் நெய்தீபம் ஏற்றி வழிபடுதல் நல்லது. | சந்திராஷ்டமம் : ஆடி மாதம் 9ம் தேதி வியாழக் கிழமை 25/7/2024 மாலை 3.06 மணிமுதல் ஆடி மாதம் 11ம் தேதி சனிக்கிழமை 27/7/2024 மாலை 5.27 மணி வரை**

## கன்னி

**கன்னி ராசி அன்பர்களே!**

பொருளாதார நிலைமை திருப்திகரமாக இருப்பதாலும், தேவையற்ற செலவுகள் இல்லை என்பதாலும் குடும்பத்தில் மகிழ்ச்சியான சூழ்நிலை இருக்கும். கணவன் – மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். ஆரோக்கியம் சிறிதளவு பாதித்தாலும் உடனே சரியாகி விடும். சிலருக்கு ஆன்மிகப் பயணம் மேற்கொள்ளும் வாய்ப்பு உண்டு.

வேலைக்குச் செல்லும் அன்பர்களுக்கு அலுவலகத்தில் பணிச்சுமை அதிகரிக்கும். அதற்கேற்ற ஆதாயமும் கிடைக்கும் என்பதால் உற்சாகமாகக் காணப்படுவீர்கள்.

வியாபாரத்தில் லாபம் குறைவாகத்தான் இருக்கும். கடையை விரிவுபடுத்தவோ அல்லது வேறு இடத்துக்கு மாற்றவோ சாதகமான சூழ்நிலை இல்லை என்பதால் பொறுமை அவசியம்.

குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்மணிகளுக்கு தேவையான பணம் கிடைக்கும் என்பதால் பிரச்னை இருக்காது. அலுவலகத்தில் கூடுதல் பொறுப்புகளும் அதற்கேற்ற சலுகைகளும் கிடைக்கும்

**வணங்கி வழிபடவேண்டிய தெய்வம்:நடராஜப்பெருமானை வழிபடுதல் நல்லது | ஸ்லோகம்: மன்னானவன் உலகிற்கொரு மழையானவன் பிழையில்
பொன்னானவன் முதலானவன் பொழில்சூழ்புள மங்கை என்னானவன் இசையானவன் இளஞாயிறின் சோதி அன்னானவன் உறையும்மிடம் ஆலந்துறை யதுவே. இந்த பாடலை 27 முறை பாராயணம் செய்யவும் | பரிகாரம்: நடராஜருக்கு தினமும் காலையில் வீட்டு பூஜையறையில் நல்லெண்ணை தீபம் ஏற்றி வழிபடுவது நல்லது | சந்திராஷ்டமம்: ஆடி மாதம் 11ம் தேதி சனிக்கிழமை 27/7/2024 மாலை 5.28 மணி முதல் ஆடி மாதம் 13ம் தேதி திங்கள்க்கிழமை 29/7/2024 இரவ 8.26 மணி வரை**

## துலாம்

**துலா ராசி அன்பர்களே!**

வருமானம் திருப்திகரமாக இருக்கும். செலவுகள் கட்டுக்குள் இருக்கும். வாழ்க்கைத் துணைவழி உறவுகளால் ஆதாயம் கிடைக்கக்கூடும். எதிர்பார்த்த நல்ல செய்தி இந்த வாரம் கிடைப்பதற்கு வாய்ப்பு உள்ளது. பொறுப்புகளை நிறைவேற்றுவதற்காகக் கொஞ்சம் அலைச்சலும் அதனால் சோர்வும் உண்டாகும்.

அலுவலகத்தில் சக ஊழியர்கள் உங்கள் பணிகளில் உதவி செய்வார்கள். மற்றபடி பதவி உயர்வோ சலுகை உயர்வோ இந்த வாரம் எதிர்பார்க்க முடியாது.

வியாபாரத்தில் விற்பனை இருந்தாலும் கூட அதற்கேற்ற லாபம் கிடைக்காது. எனவே பொறுமையை விடாமல் வியாபாரத்தில் கவனமாக இருப்பது நல்லது.

குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்மணிகளுக்கு போதிய அளவு பண வசதி கிடைப்பதால் மனநிறைவு உண்டாகும். அலுவலகத்துக்குச் செல்லும் பெண்மணிகள் தங்கள் பணிகளில் எச்சரிக்கையாக இருப்பதுடன், சக பணியாளர்களிடம் பக்குவமாக நடந்துகொள்ளவும்.

**வணங்கி வழிபடவேண்டிய தெய்வம்: பெருமளை வழிபடுதல் நல்லது | ஸ்லோகம்: இறையாய் நிலனாகி எண்டிசையும் தானாய், மறையாய் மறைப்பொருளாய் வானாய் – பிறைவாய்ந்த
வெள்ளத் தருவி விளங்கொலிநீர் வேங்கடத்தான், உள்ளத்தினுள்ளே உளன். பாடலை 27 முறை பாராயணம் செய்யவும் | பரிகாரம்: பெருமாளுக்கு தினமும் காலையில் வீட்டு பூஜையறையில் நெய்தீபம் ஏற்றி வழிபடவும் | சந்திராஷ்டமம்: ஆடி மாதம் 13ம் தேதி திங்கள்க்கிழமை 29/7/2024 இரவ 8.27 மணி முதல் ஆடி மாதம் 15ம் தேதி புதன்கிழமை 31/7/2024 இரவ 12.52 மணி வரை**

## விருச்சிகம்

**விருச்சிக ராசி அன்பர்களே!**

பொருளாதார வசதி சுமாராகத்தான் இருக்கும். செலவுகள் கட்டுக்குள் அடங்கி இருக்கும். உறவினர்களுடன் வீண் மனவருத்தம் ஏற்பட வாய்ப்பு உண்டு. குடும்பம் தொடர்பான எந்த ஒரு முடிவையும் ஒருமுறைக்குப் பலமுறை யோசித்து எடுப்பது நல்லது. சிலருக்கு வெளியூர் பயணம் செல்ல நேரும்.

அலுவலகத்தில் நீண்டநாள்களாக எதிர்பார்த்த சலுகை இப்போது கிடைக்கும். சிலருக்கு இடமாற்றம் கிடைக்க வாய்ப்பு உள்ளதால், தற்காலிகமாக குடும்பத்தை விட்டு பிரிந்திருக்க நேரும். வியாபாரத்தில் விற்பனை நல்லபடியாக இருப்பதுடன், எதிர்பார்த்ததை விடவும் லாபம் கூடுதலாகக் கிடைக்கும்.

குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்மணிகளுக்கு குடும்ப நிர்வாகத்தில் சிறிது சிரமங்கள் ஏற்படும். வேலைக்குச் செல்லும் பெண்மணிகளுக்கு அலுவலகத்தில் மகிழ்ச்சியான சூழ்நிலை காணப்படும்.

**வணங்கி வழிபடவேண்டிய தெய்வம்: அம்பிகை வழிபடுதல் நல்லது | ஸ்லோகம்: நின்றும் இருந்தும் கிடந்தும் நடந்தும் நினைப்பதுன்னை,
என்றும் வணங்குவது உன்மலர்த்தாள்! எழுதாமறையின் ஒன்றும் அரும் பொருளே! அருளே! உமையே! இமயத்து அன்றும் பிறந்தவளே! அழியாமுத்தி ஆனந்தமே!
பாடலை 27 முறை பாராயணம் செய்யவும் | பரிகாரம்: அம்பிகைக்கு தினமும் காலையில் வீட்டு பூஜையறையில் நல்லெண்ணை தீபம் ஏற்றி வழிபடுதல் நல்லது.. சந்திராஷ்டமம் :ஆடி மாதம் 15ம் தேதி புதன்கிழமை 31/7/2024 இரவு 12.53 மணி முதல் ஆடி மாதம் 18ம் தேதி சனிக்கிழமை 3/8/2024 காலை 7. 28 மணி வரை**




**தனுசு ராசி அன்பர்களே!**

பண வரவுக்கு குறைவிருக்காது. குடும்பச் சூழ்நிலை மகிழ்ச்சி தருவதாக இருக்கும். எதிர்பாராத செலவுகள் ஏற்படக்கூடும். சகோதர வகையில் சச்சரவுகள் மறைந்து சுமுகமான உறவு உண்டாகும். நீதிமன்றத்தில் வழக்குகள் இருந்தால், சாதகமாக முடியும். கணவன் - மனைவிக்கிடையே ஒற்றுமை வலுப்படும்.

அலுவலகத்தில் உங்களுக்கு மறுக்கப்பட்டு வந்த சம்பள உயர்வு, பதவி உயர்வு போன்ற சலுகைகள் கிடைக்கும். சிலருக்கு வேறு ஊருக்கு இட மாறுதல் கிடைக்கும் என்பதால், தற்காலிகமாக குடும்பத்தை விட்டு பிரிந்திருக்க நேரும்.

வியாபாரத்தில் விற்பனை சற்று மந்தமாகத்தான் இருக்கும். சக வியாபாரிகளுடன் இணக்கமாக நடந்துகொள்வது அவசியம். முயற்சிகளில் கூடுதல் கவனம் தேவை.

குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்மணிகள் சற்று பொறுமையைக் கடைப்பிடிக்க வேண்டியது அவசியம். வேலைக்குச் செல்லும் பெண்மணிகளுக்கு அலுவகத்தில் சில சலுகைகள் கிடைக்கும்.

**வணங்கி வழிபடவேண்டிய தெய்வம்: விநாயகரை வணங்குதல் நல்லது | ஸ்லோகம்: ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை, இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினை புந்தியில் வைத்தடி போற்றுவனேபாடலை 27 முறை பாராயணம் செய்யவும் | பரிகாரம்: விநாயகரை தினமும் காலையில் வீட்டு பூஜையறையில் தீபம் ஏற்றி வழிபாடு செய்யவும் | சந்திராஷ்டமம்: ஆனி மாதம் 22ம் தேதி சனிக்கிழமை 06/7/2024 இரவு 11.47 மணி முதல் ஆனி மாதம் 25ம் தேதி செவ்வாய்க்கிழமை 9/7/2024 காலை 9.09 மணி வரை**




**மகர ராசி அன்பர்களே!**

எதிர்பார்த்ததை விடவும் பணவரவு அதிகமாக இருக்கும். தேவையற்ற செலவுகள் எதுவும் ஏற்படுவதற்கில்லை. வராது என்று நினைத்த கடன் வந்து சேரும். உடல் நலன் சிறிய அளவில் பாதிக்கப்படும். திருமண முயற்சிகள் சற்று இழுபறிக்குப் பின்னர் சாதகமாக முடியும். வாழ்க்கைத்துணையுடன் அனுசரித்துச் செல்வது நல்லது.

அலுவலகத்தில் பணிச் சுமை அதிகரிக்கும். நீண்டநாள்களாக எதிர்பார்த்து வந்த பதவி உயர்வு கிடைக்கும் என்பதால் மனதில் உற்சாகம் அதிகரிக்கும்.

வியாபாரத்தில் விற்பனையும் லாபமும் எதிர்பார்த்தபடியே திருப்தியாக இருக்கும். பற்று வரவு சுமுகமாக நடைபெறும். கடையை விரிவுபடுத்துவது போன்ற முயற்சிகளை இந்த வாரம் மேற்கொள்ளலாம். குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்மணிகளுக்கு மனதுக்கு உற்சாகம் தரும் சம்பவங்கள் நடைபெறும். விருந்தினர்கள் வருகை இருக்கும். அலுவலகத்தில் மகிழ்ச்சி நிலவும்.

**வணங்கி வழிபடவேண்டிய தெய்வம்: முருகப்பெருமானை வழிபடுதல் நல்லது | ஸ்லோகம் :துதிப்போர்க்கு வல்வினை போம்; துன்பம்போம்; நெஞ்சில் பதிப்போர்க்குச் செல்வம் பலித்துக் கதித்தோங்கும் நிஷ்டையுங் கைகூடும், நிமலரருள் கந்தர் சஷ்டி கவசம்தனை. அமர ரிடர்தீர அமரம் புரிந்த குமரனடி நெஞ்சே குறி. பாடலை 27 முறை பாராயணம் செய்யவும் | பரிகாரம்: விநாயகரை தினமும் காலையில் வீட்டு பூஜையறையில் நெய்தீபம் ஏற்றி வழிபடுதல் நல்லது | சந்திராஷ்டமம்: ஆனி மாதம் 25ம் தேதி செவ்வாய்க் கிழமை 9/7/2024 காலை 9.10 மணிமுதல் ஆனி மாதம் 27ம் தேதி வியாழக்கிழமை 11/7/2024 இரவு 8.23 மணி மணி வரை**




**கும்ப இராசி அன்பர்களே!**

வேதனையையும் சாதனையாக மாற்ற முடியும் என்பதற்கு எடுத்துக்காட்டாக துன்பத்தையும், இன்பமாக மாற்றும். இந்த மாதம் எல்லா வகையிலும் நன்மை உண்டாக்கும். மற்றவர்களுக்கு உதவிகள் செய்து மதிப்பு கிடைக்க பெறுவீர்கள்.

உடல் உழைப்பை அதிகரிக்க செய்யும். குறிக்கோளற்ற பயணங்கள் உண்டாகும். விழிப்புடன் இருப்பது நல்லது. சுப செலவுகள் உண்டாகும். கையிருப்பு கரையும். ஆன்மீக யாத்திரைகள் சென்று வருவீர்கள்.

தொழில் வியாபாரத்தில் இருப்பவர்கள் போட்டிகளை சந்திக்க வேண்டி இருக்கும். பார்ட்னர்களுடன் சுமூகமாக செல்வது நல்லது. பழைய பாக்கிகள் வசூலாவதில் தாமதம் ஏற்படும்.

**வணங்கி வழிபடவேண்டிய தெய்வம்: முருகப்பெருமானை வழிபடுதல் நல்லது | ஸ்லோகம்: கஜானனம் பூத கணாதி ஸேவிதம் கவித்தஜம்பு பல ஷார பஷ்ஷிதம் உமா தம் சோக விநாச காரணம் நமாமி விக்னேஷ்வர பாத பங்கஜம் 27முறை பாராயணம் செய்யவும் | பரிகாரம்: முருகனை நினைத்து தினமும் காலையில் வீட்டு பூஜையறையில் நெய்தீபம் ஏற்றி வழிபாடு செய்யவும். | சந்திராஷ்டமம் :ஆனி மாதம் 27ம் தேதி வியாழக்கிழமை 11/7/2024 இரவு 8.24 மணி முதல் ஆனி மாதம் 30ம் தேதி ஞாயிற்றுக்கிழமை 14/7/2024 காலை 8.05 வரை**




**மீன ராசி அன்பர்களே!**

பணவரவு ஓரளவு திருப்தி தரும். வீண் செலவுகள் எதுவும் ஏற்படுவதற்கில்லை. விலகிச் சென்ற உறவினர்கள் உங்களைப் புரிந்துகொண்டு உறவு கொண்டாடுவார்கள். திருமண முயற்சிகள் சாதகமாக முடியும். வழக்குகளில் முன்னேற்றம் எதுவும் ஏற்படுவதற்கில்லை. கண்களில் சிறிய அளவில் பிரச்னை ஏற்படக்கூடும். அலுவலகத்தில் வேலைச் சுமை அதிகரிக்கும். சிலருக்கு விரும்பத் தகாத இடமாற்றம் ஏற்படக்கூடும். அதிகாரிகளிடம் பக்குவமாக நடந்துகொள்ளவும். வியாபாரத்தில் விற்பனையும் லாபமும் சுமாராகத்தான் இருக்கும். பற்று வரவில் பிரச்னை எதுவும் இருக்காது. சரக்கு கொள்முதலுக்காக தொலைதூர பயணங்கள் செல்ல நேரிடும். குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்மணிகளுக்கு மகிழ்ச்சியான வாரம். வேலைக்குச் செல்லும் பெண்மணிகளுக்கு அலுவலகத்தில் கூடுதல் பொறுப்புகள் கிடைக்கும்.

**வணங்கி வழிபடவேண்டிய தெய்வம்: தட்சிணாமூர்த்தியை வழிபடுதல் நல்லது | ஸ்லோகம்: மெய்யராகி பொய்யை நீக்கி வேதனையைத் துறந்து செய்யரானார் சிந்தையானே தேவர்குலக் கொழுந்தேநைவனாயேன் உந்தன் நாமம் நாளும் நவிற்றுகின்றேன் வையம் முன்னே வந்து நல்காய் வலிவல மேயவனே. பாடலை 27 முறை பாராயணம் செய்யவும் | பரிகாரம்: தக்ஷினாமூர்த்தி குருவை தினமும் காலையில் வீட்டு பூஜை யறையில் நெய்தீபம் ஏற்றி வழிபடுதல் நல்லது | சந்திராஷ்டமம் : ஆனி மாதம் 30ம் தேதி ஞாயிற்றுக்கிழமை 14/7/2024 காலை 8.06 ஆனி மாதம் முதல் 32ம் தேதி செவ்வாய்க் கிழமை 16/7/2024 மாலை 6.34 மணிவரை**



# நேர்மையாக இருந்தால் காத்திருப்போர் பட்டியலா?

**கள்ளக்குறிச்சி சம்பவ எதிரொலி** **பரிசீலனை செய்யுமா அரசு...**

கள்ளக்குறிச்சி சம்பவத்தின் எதிரொலியாக, போதைப்பொருள் தடுப்பு நுண்ணறிவு ஏடிஜிபி மகேஷ்குமார் அகர்வால் IPS அவர்களை காத்திருப்போர் பட்டியலுக்கு மாற்றம் செய்து உத்தரவிட்டது தமிழக அரசு. இந்த சம்பவம் காவல்துறை வட்டாரத்தில் மிகுந்த அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது.

இது சம்பந்தமாக நேர்மையான அதிகாரிகளிடம் விசாரித்தபோது, மகேஷ்குமார் அகர்வால் கடந்த ஒரு வருடமாக இப்பதவியில் மிகவும் நேர்மையான முறையில் எந்தவித குற்றச்சாட்டுகளுக்கும் உள்ளாகாமல் சிறப்பாக பணியாற்றி வந்துள்ளார். மதுவிலக்கு அமலாக்கப் பிரிவை பொறுத்தவரையில், கள்ளச்சாராயம் காய்ச்சுதல், கொண்டு செல்லுதல், வைத்திருத்தல் மற்றும் விற்பனை செய்வதை ஒழித்தல், போலி மற்றும் ஆயத்தீர்வை செலுத்தப்படாத இந்திய தயாரிப்பு அயல்நாட்டு மதுபானங்கள், அண்டை மாநிலங்களிலிருந்து கடத்தி வரப்படுவதை தடுத்தல் ஆகியவற்றை முதன்மை குறிக்கோளாகக் கொண்டு மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு செயல்பட்டு வருகிறது.

மகேஷ்குமார் அகர்வால் தலைமையில், ஒரு காவல்துறை தலைவர்( ஐஜி ) மற்றும் மூன்று காவல் கண்காணிப்பாளர்கள் உள்ளனர். காவல் கண்காணிப்பாளர் (மத்திய நுண்ணறிவு பிரிவு ) அவர்களுக்கு உதவியாக இரண்டு துணை கண்காணிப்பாளர்கள், ஆறு காவல் ஆய்வாளர்கள், எட்டு காவல் உதவி ஆய்வாளர்கள் மற்றும் பிற காவலர்கள் உள்ளனர். சென்னை மற்றும் மதுரையில் மண்டல அமலாக்க காவல் கண்காணிப்பாளர்கள் செயல்பட்டு வருகின்றனர்.

இவர்களது பணி என்னவென்றால், மது கள்ளச்சாராயம் எங்கெல்லாம் புழங்குகிறதோ அதனைப்பற்றிய தகவல்களை உளவு பார்த்து கூறுவதே இவர்களது பணி. இவர்களுக்கு வழக்குகள் பதிவு செய்வதற்கான எந்தவிதமான அதிகாரங்களும் வழங்கப்படவில்லை. அதையும் தாண்டி இவர்கள் யாரையாவது பிடித்தால், காவல் நிலைய சட்டம் ஒழுங்கு போலீசார், மதுவிலக்கு போலீசார் வசம் ஒப்படைப்பார்கள்.

இவர்களுக்கு வரும் தகவல்களை துணை கண்காணிப்பாளர், மத்திய துப்பறியும் பிரிவு மூலமாக காவல் கண்காணிப்பாளருக்கு தெரியப்படுத்துவார்கள். பின்னர் காவல்துறை தலைவர் மூலமாக ஏடிஜிபிக்கு வந்ததும், அந்தந்த மாவட்ட கண்காணிப்பாளர்களுக்கு மெமோ மூலமாக உங்கள் பகுதிகளில் இவ்வாறான தவறுகள் நடப்பதாகக் கூறி ( மது சம்பந்தமாக ) நடவடிக்கை எடுக்க வலியுறுத்துவார். அதன் நகல்கள் சம்பந்தப்பட்ட சரக DIG, IG, ADGP, ( சட்டம் ஒழுங்கு) இவர்களுக்கு அனுப்பப்படும். இதுதான் ADGP.

***கடந்த காலங்களில் ADGP திரு.மகேஷ்குமார் அகர்வால் IPS அவர்கள் போதைப்பொருள் தடுப்பு பிரிவில் (NIB ) போதைப்பொருட்களை ஒழிப்பதில் மிகவும் திறமையாக செயல்பட்டு, பொதுமக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்தியதோடு, போதை பொருட்களை கடத்துபவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுத்துள்ளார். இந்த அரசின் போதை இல்லாத தமிழ்நாடு என்ற இலக்கை அடைய மிகவும் கடுமையாக போராடியுள்ளார்.***



அமலாக்கத்துறையின் பணி.

மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு ஒவ்வொரு மாவட்டத்திலும், மாவட்ட காவல் கண்காணிப்பாளர், மாநகரங்களில் காவல் ஆணையர்கள் கட்டுப்பாட்டில் தான் இயங்கும். அவர்களுக்குத்தான் வழக்குகள் பதிவு செய்ய, குற்றவாளிகளை கைது செய்து நடவடிக்கை எடுக்க என அனைத்து அதிகாரங்களும் உண்டு. இந்த மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு அந்தந்த கண்காணிப்பாளர்கள், காவல் ஆணையர்கள் கட்டுப்பாட்டின் கீழ் இயங்குவதால் அவர்களுக்கு பணி மாறுதல் செய்யும் அதிகாரமும் உண்டு.

என்னதான் ADGP ( Enforcement memo ) மூலமாக எந்த தகவல்கள் வந்தாலும், அதை நிறைவேற்றும் பொறுப்பு அந்தந்த மாவட்ட கண்காணிப்பாளர்கள், மாநகர காவல் ஆணையர்களுக்கு தான் உள்ளது. அதேபோல் மதுவிலக்கு அமலாக்கப் பிரிவில், ஒரு அதிகாரியை பணி மாற்றம் செய்யக்கூட ADGP க்கு ( Enforce-ment ) அதிகாரம் கிடையாது. அவர் ஒரு சாதாரண காவல் துறை அதிகாரிபோல்தான்.

கடந்த காலங்களில் ADGP திரு.மகேஷ்குமார் அகர்வால் IPS அவர்கள் போதைப்பொருள் தடுப்பு பிரிவில் (NIB ) போதைப்பொருட்களை ஒழிப்பதில் மிகவும் திறமையாக செயல்பட்டு, பொதுமக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்தியதோடு, போதை பொருட்களை கடத்துபவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுத்துள்ளார். இந்த அரசின் போதை இல்லாத தமிழ்நாடு என்ற இலக்கை அடைய மிகவும் கடுமையாக போராடியுள்ளார்.

மேலும் பொதுமக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்துவது சம்பந்தமாக, கடந்த இரண்டு ஆண்டுகளாக பல்வேறு உலக சாதனைகளை தமிழகத்திற்கு பெற்று தந்துள்ளார். தற்போதுள்ள நவீன விஞ்ஞான காலத்திற்கு ஏற்ப, சமூக வலைதளங்கள் மூலம் விழிப்புணர்வை ஏற்படுத்தியுள்ளார். இப்படிப்பட்ட ஒரு நேர்மையான அதிகாரியை கள்ளக்குறிச்சி சம்பவத்திற்கு எந்தவித சம்பந்தமும் இல்லாத இவரை காத்திருப்போர் பட்டியலுக்கு மாற்றியது நேர்மையான அதிகாரிகள் மத்தியில் கலக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. ADGP.திரு. மகேஷ்குமார் அகர்வால் காத்திருப்போர் பட்டியலில் இருப்பதால், போதை பொருள் கடத்தல் ஆசாமிகள் கொண்டாட்டத்தில் உள்ளனர் என்கிறார்கள். மக்கள் முதல் மந்திரிவரைஅனைவருக்கும் பாதுகாப்பு பணியாற்றிவரும் (நேர்மையான)காவல்துறை அதிகாரிகளுக்கே இந்தநிலையா என்று சமூக ஆர்வலர்கள் முதல் பொதுமக்களிடமும் கேள்வி எழும்பி உள்ளது காவல்துறையை தனது கட்டுபாட்டில் வைத்திருக்கும் மாண்புமிகு முதல்வர்தான் இதுசம்மந்தமாக நடவடிக்கை எடுக்கவேண்டும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

ஏடிஜிபி மகேஷ்குமார் அகர்வால் IPS அவர்களை காத்திருப்போர் பட்டியலில் வைத்திருப்பதை பரிசீலனை செய்ய வேண்டும் என்கிற கோரிக்கையும் பல்வேறு தரப்பினர் மத்தியில் எழுந்துள்ளது.




**வாழ்வில் கஷ்டம் என்பது சின்ன கல்மாதிரி அதைநம்கண்கிட்ட வைத்து பார்த்தால் அது உலகத்தையே மறைத்து விடும். அதைகொஞ்சம் தூரத்தில் வைத்துபார்த்தால் அதுஎன்னவென்று நமக்குபுரியும். எல்லாம் நம்பார்க்கும் பார்வையில்தான் உள்ளது.**

**– ஆசிரியர் Dr.N.பாலகிருஷ்ணன்**



# உங்களுக்கு நேரம் கிடைக்கும் போதெல்லாம் பொறுமையாக மீண்டும் மீண்டும் படிக்கவும்...

இதை படிக்கும் முன் உங்கள் மனதை ஒரு நிலைப்படுத்திய பின்னர் படியுங்கள். அப்போது தான் ஒரு தெளிவு உங்களுக்குள் பிறக்கலாம்.

(இது ஆத்மார்ந்த மூத்தோரின் அனுபவ அறிவுரை)

உன்னை வாழ்த்த மனம் இல்லாதவர்கள் இருப்பார்கள். அவர்களைப் பற்றி கவலைப்படாதே.

நீ எதை செய்தாலும் அதில் ஒரு குறையை கண்டுபிடிக்கக்கூடிய மனிதர்களும் இருந்து கொண்டுதான் இருப்பார்கள்.

அதையும் பெரிது பண்ணாதே.

உன் லட்சியம் எதுவோ அதை நோக்கி பயணம் போ.

ஒன்றை மட்டும் தெரிந்து கொள்....

ஒவ்வொரு மனிதனும்<br>
தனித்தனி ஜென்மங்கள்<br>
தனித்தனி பிறவிகள்<br>
தனித்தனி ஆன்மாக்கள்

அவர்களுக்கென்று தனித்தனி ஆசாபாசங்கள் இருக்கும். குணங்களும் இருக்கும். அதன் வழியில் தான் அவர்களின் பயணமும் இருக்கும். அவர்களை ஒழுங்கு படுத்துகிறேன் என்று வேதனைகளை சுமந்து கொள்ளாதே. அவர்கள் போகும் வரை போகட்டும். போய் ஒரு அனுபவத்தை பெற்றபின் திரும்பி வருவார்கள்.

அதுவரை நீ பொறுமையாக இருக்க வேண்டும். அவர்கள் போன பாதை நல்லதா? கெட்டதா? என்பதை அவர்களாக உணர்ந்தால்தான் அவர்களுக்கு ஒரு உண்மை தெரியும். அந்த உண்மையை நீ முன்கூட்டியே சொன்னால் உன்னை அவர்களுக்கு பிடிக்காது.

இதுதான் வாழ்க்கையின் தத்துவ உண்மை.

அவர்களது பூர்வ புண்ணியத்தின் அடிப்படையில்தான் அவர்களின் குணங்களும் செயல்களும் இருக்கும்.

அது, உடன் பிறந்தவர்களாக இருந்தாலும், நண்பர்களாக இருந்தாலும், கணவன், மனைவியாக இருந்தாலும், பெற்ற குழந்தைகளாக இருந்தாலும், பேரன் பேத்திகளாக இருந்தாலும், எந்த உறவுகளாக இருந்தாலு அவர்களது பிறவி குணம் ஒரு போதும் மாறாது.

எதைச் செய்ய வந்தார்களோ அதை செய்வதுதானே அவர்களின் விதி. இதை நீ மாற்றி அமைக்க முடியுமா...?

ஒதுங்கி நின்று வேடிக்கை பார்!.

பந்த பாசத்தில் உள்ளே விழுந்து அறிவுரை சொல்லுகிறேன் என்று கெட்ட பெயரை சம்பாதித்துக்

கொண்டிருக்காதே.

அவர்களுக்கு அனுபவம் தான் குரு.

அந்த அனுபவம் ஏற்பட்ட பிறகு தன்னை மாற்றிக் கொள்வதற்கு அவர்களுக்கு விதி இருந்தால் தன்னை திருத்திக் கொள்வார்கள். அதுவரை நீ பொறுமையாக இரு.

செயற்கையாக ஒரு குணத்தை உருவாக்கி உன்னிடம் அன்பை காட்டினாலும், தான் யார்? தன் குணம் என்ன? என்பதை ஒரு நாள் வெளிப்படுத்தி விடுவார்கள். எதையும் ஏற்றுக்கொள்ளும் பக்குவத்தோடு இருந்து கொள்ள பழகிக் கொள்.

நாம் வந்து போகும் உலகத்தில் பிறந்திருக்கிறோம். அவரவர்களுக்கு என்ன வேஷம் கொடுக்கப்பட்டிருக்கிறதோ அதைத்தான் செய்து கொண்டிருக்கிறோம். அதைத் தவிர நாம் வேறு எதையும் செய்து காட்ட முடியாது.

எல்லையில்லாத அன்பை வைத்திருந்தேன் என்னை ஏமாற்றி விட்டார்கள் என்று புலம்பிக் கொண்டு இருக்காதே. கடலுக்கும் ஒரு எல்லை வைத்திருக்கிறான் கடவுள்.

அதையும் மீறி சிலவேளைகளில் இறைவன் வகுத்த எல்லையை கடல் தாண்டி விடுகிறது. அது போல் இயற்கையின் சுபாவங்களைப் போல் மனித இயற்கை சுபாவங்கள் சில நேரங்களில் தங்களை வெளிப்படுத்தி விடும்.

நீ உன்னை எப்படி வைத்துக் கொள்ள வேண்டும் என்று நினைக்கிறாயோ அப்படி வைத்துக் கொண்டு வாழப்பழகிக் கொள். அதில் நன்மை வந்தாலும், தீமை வந்தாலும், உனக்கும் ஒரு அனுபவம் கிடைக்கும். அதை வைத்து உன்னையும் திருத்திக் கொள்ளலாம்.

இன்பமானாலும் துன்பமானாலும் அதை நீயே சந்திக்க கற்றுக்கொள். அதை பகிர்ந்து கொள்வதற்கு ஒரு துணையைத் தேடாதே.

உன் இன்ப துன்பத்தில் பங்கு பெறுவதற்கு இந்த பிரபஞ்சத்தில் ஒருவர் பிறந்திருந்தால் நிச்சயம் அவர் உன்னை கைவிடாமல் உன்னோடு சேர்ந்தே பயணிப்பார். அது உன் பிறவி பிராப்தத்தை பொறுத்து இருக்கிறது. அப்படி அது நடந்து விட்டால், எந்த சூழ்நிலையிலும் உன்னோடு இணைந்தே இருப்பார்.



நீ பெண்ணாக இருந்தாலும், ஆணாக இருந்தாலும், வரும் துன்பத்தை எதிர் கொள்ளக்கூடிய ஆற்றலை உருவாக்கிக் கொள்.

மனிதன் மீது வைக்கும் நம்பிக்கையை விட இறைவன் மீது வைக்கும் நம்பிக்கையை அதிகரித்துக் கொள்.

உன் கண்ணீரும். உன் கவலையும் உன்னை பலவீனமாக காட்டிவிடும்... அழுவதாலும் சோர்ந்து போவதாலும் ஒன்றும் நடக்கப் போவதில்லை. எப்படி இருந்தாலும் நீதான் அந்த சுமையை சுமந்து ஆகவேண்டும்.

"அழுது சுமப்பதை காட்டிலும், ஏற்று சுமப்பது உனக்கு சிரமம் இல்லாமல் இருக்கும்."

தைரியமும் தன்னம்பிக்கையும் தான் ஒரு மனிதனை உலகத்தில் வாழ வைக்கும் என்ற உண்மையை உணர்ந்துகொள். இந்த பக்குவத்தை அடைந்து விட்டால் எத்துன்பமும் உன்னை நெருங்காது என்பதை உணர்ந்துகொள்.

இப்பதிவை பத்திரப்படுத்தி, உங்களுக்கு நேரம் கிடைக்கும் போதெல்லாம் பொறுமையாக மீண்டும் மீண்டும் படிக்கவும்.



***துன்புறூஉம் துவ்வாமை இல்லாகும் யார்மாட்டும்***
***இன்புறூஉம் இன்சொ லவர்க்கு.ம்*** *குறள் 94: இனியவை கூறல்*

**எவரிடமும் இன்பம் தரும் இனிய சொற்களைப் பேசுபவர்க்குத் துன்பம் தரும் வறுமை வராது.** *-சாலமன் பாப்பையா*

## கொடைக்கானலில்

# மான் வேட்டையாடி சமூக வலைதளத்தில் புகைப்படம் வெளியிட்ட 6 பேர் கைது

## வனத்துறையினர் அதிரடி

திண்டுக்கல் மாவட்டம் கொடைக்கானல் பெரும்பாலான இடங்கள் வனப் பகுதியாகவே இருந்து வருகிறது . இங்கு மான், காட்டெருமை, சிறுத்தை, புலி ,உள்ளிட்ட பல்வேறு வன விலங்குகளும் இருந்து வருகிறது.

தொடர்ந்து இந்த வன விலங்குகள் நகர் பகுதி மட்டுமின்றி நகர் பகுதியில் ஒட்டி உள்ள இடங்களிலும் உலா வருகிறது. இந்த நிலையில் கொடைக்கானல் வாழைகிரி பகுதியில் தனியார் தோட்டத்தில் இருந்த சிலர் மான் வேட்டையாடி அதனை சமைப்பதற்காக தயார் செய்து வந்த புகைப்படத்தை சமூக வலைதளத்தில் வெளியிட்டுள்ளனர்.

தொடர்ந்து இந்த புகைப்படம் குறித்து வனத்துறையினருக்கு தகவல் தெரிவிக்கப்பட்ட நிலையில் சம்பவ இடத்திற்கு சென்ற வனத்துறையினர் ரோந்து பணியில் ஈடுபட்டனர். அப்போது சமைப்பதற்காக வைக்கப்பட்டிருந்த மான் இறைச்சி, மற்றும் சமைத்த மான் இறைச்சி ஆகியவற்றை பறிமுதல் செய்தனர்.

மேலும் இந்த சம்பவத்தில் ஈடுபட்ட செல்வகுமார், ராஜேஷ் கண்ணன், அஜித், சிவராமன், ராமகிருஷ்ணன், பிரவீன் ஆகிய ஆறு பேரை வனத்துறையினர் கைது செய்து வழக்கு பதிவு செய்துள்ளனர். மேலும் வேட்டையாடுவதற்காக பயன்படுத்தப்பட்ட இருசக்கர வாகனம் மற்றும் டிராக்டர் மற்றும் அருவாள் உள்ளிட்ட ஆயுதங்களை பறிமுதல் செய்தனர். மேலும் இவர்கள் பல்வேறு வேட்டை சம்பவங்களில் ஈடுபட்டு உள்ளனரா என்பது குறித்தும் வனத்துறையினர் விசாரணை தீவிர படுத்தி உள்ளனர்.

நிருபர்: R.குப்புசாமி கொடைக்கானல்



# அகத்தியர் உரைத்த உடம்பின் 4,448 நோய்கள்

இயற்கை வாழ்வியலும் உடல் நலமும்

**மனிதனின் உடம்பில் 4448 வியாதிகள் உள்ளன என்று சித்தர் அகத்தியர் கூறுகின்றார்.**

வாதம் - 84
பித்தம் - 48
கபம் - 96
தனுர்வாயு - 300
சயம் - 7
பெருவயர் - 8
சூலை - 200
கண்நோய் - 96
சிலந்தி - 68
சன்னி - 76
கழலை - 95
சுரம் - 85
மகோதரம் - 7
தலைவீக்கம் - 5
உதிரநோய் - 16
பிளவை - 10
படுவன் - 11
பீலி - 8
உருவசியம் - 5
பேரறிகறப்பான் - 90
கெண்டை - 10
குட்டம் - 20
கதிர்வீச்சு - 3
மதிவட்டை - 5
சோலிநோய் - 16
இசிவு - 6
மூர்ச்சை - 7
வேலிநோய் - 46
மூலம் - 9
கழல்நோய் - 10
கடிவிசம் - 52
கிராணி - 25
பல் நோய் - 76
மாலை கண் - 20
அதிசாரம் - 25
கட்டி - 12
கிருமி - 6
முட்டு நோய் - 30
முதிர் நோய் - 20
சத்தி - 5
கல்லடைப்பு - 80
வாய்வு - 90
திமிர் நோய் - 10
மேகம் - 21
நீராம்பல் - 5
காதுநோய் - 10
விக்கல் - 10
அரோசிகம் - 5
மூக்கறுப்பன் - 10
கடிதோடம் - 500
குத்து வெட்டு - 700
கிரந்தி - 48
பொறிவிடம் - 800
துடிநோய் - 100
பிள்ளைநோய் - 100
குமிழி - 7
விப்புருதி - 18
விசபாகம் - 16
பிரநீர்க்கோவை - 200

மேற்கூறிய வியாதிகளை சோதிக்க மனிதனின் உடலில் 72000 நாடி நரம்புகள் ரத்த குழாய்கள் உள்ளன. மேலும் இதனை சோதிக்க பெருநாடிகள் என்று 10 உள்ளன.
அவையாவன,

1. இடகலை
2. பிங்கலை
3. சுழுமுனை
4. சிகுவை
5. புருடன்
6. காந்தாரி
7. அத்தி
8. அலம்புடை
9. சங்குனி
10. குரு நாடி

மேற்குறியவற்றுள் முக்கிய நாடி,
1. இடகலை :- அபானன் (வாதம்)
2. பிங்கலை :- பிராணன் (பித்தம்)
3. சுழுமுனை :- சமானன் (கபம்)
- என்று அறிய வேண்டும்.

அகத்தியர் கவி:
நாடியான் முன்னோர்சொன்ன
நற்குறிக்குணங்களாலு
நீடிய விழியினாலு நின்ற நாட்
குறிப்பினாலும்
வாடிய மேனியாலு மலமொடு
நீரினாலுஞ்
சூடிய வியாதி தன்னைச் சுகம்பெற
வருந்தி சொல்லே
சுகம்பெறவங்கமெல்லாஞ் சுருங்கிய
குணங்களாய்ந்து
முகங்குறி நாடிமூக்குச் செவிநுத
னயனநாடி
அகந்துடி யடக்குநாடி யதுதிசை
விடுதிநாடி
உகந்துடி யுந்திநாடி யுண்மையாம்
நடைகள்பாரே

- என்று அகத்தியர் நாடிகள் பரிசோதனை செய்யும் முறை பற்றி கூறுகின்றார்.

இதை தவிர கண்ணுக்கு தெரியாத நோய்கள் பல உள்ளன. இதனை இன்றைய விஞ்ஞான உலகத்தில் உள்ள "X-Ray", "CT Scan", "MRI Scan" இயந்திரங்களினால் கண்டறியமுடியாத நோய்களாவன:

1. காற்று
2. கருப்பு
3. பேய்
4. பிசாசு
5. பில்லி
6. சூனியம்
7. ஏவல்
8. செய்வினை
9. வைப்பு
10. கழிப்பு
11. மருந்து
12. கண்நேறல்

# 3 புதிய கிரிமினல் சட்டங்கள்



1. குற்றவியல் வழக்குகளில் 60 நாட்களில் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்து விசாரணை முடித்த 45 நாட்களில் தீர்ப்பு வழங்கப்பட வேண்டும். நீதிமன்றங்கள் தேவையின்றி வழக்கை ஒத்தி வைக்கக்கூடாது, சாட்சிகளை பாதுகாக்க அனைத்து மாநில அரசுகளும் பொறுப்பேற்க வேண்டும்.

2. பாலியல் குற்றங்களில் பாதிக்கப்பட்டவரின் வாக்குமூலத்தை பெண் காவல் அதிகாரி மற்றும் பாதிக்கப்பட்டவரின் உறவினர் முன்னிலையில் பதிவு செய்ய வேண்டும். ஏழு நாட்களுக்குள் மருத்துவ அறிக்கையை தாக்கல் செய்ய வேண்டும்.

3. குழந்தையை வாங்குவதும் விற்பனை செய்வதும் கடும் அபராதம் மற்றும் தண்டனைக்கு உள்ளாக்கப்படும். சிறார் மீதான கூட்டு பாலியல் பலாத்காரத்துக்கு ஆயுள் தண்டனை அல்லது மரண தண்டனை விதிக்கப்படக்கூடும்

4. சேர்ந்து கொலை செய்தல், வன்கொடுமை செய்தல் உள்ளிட்டவற்றில் ஈடுபடுவோருக்கு 7 ஆண்டுகள் தண்டனை வழங்கப்பட்டு வந்தது. மேற்சொன்ன குற்றங்களுக்கு மரண தண்டனை வழங்கும் வகையில் சட்டத்திருத்தம் செய்யப்பட்டுள்ளது.

5. சிறிய அளவிலான திருட்டு, குடி போதையில் வாகனம் ஓட்டுதல் உள்ளிட்ட குற்றங்களுக்கு புதிய சட்டத்தின்படி சமூக சேவை செய்யும் வகையில் உத்தரவிடப்படும்.

6. எஃப்ஐஆர் முறையும் இதன் மூலம் அறிமுகமானது. அதிகார வரம்பைப் பொருட்படுத்தாமல் எந்தவொரு காவல் நிலையத்திலும் தனிநபர்கள் முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்ய புதிய சட்டம் அனுமதிக்கிறது.

Owned and Published by N.Balakrishnan from 4B, GD.Floor, 4th Block, Adilti Paradise,
No.1, 2nd North Street, Poombuhar Nagar Kolathur, Chennai-600 099. and Printed him at.Meeraoffset printers
No.104, V.R.Pillai Street, Triplicane, Chennai-600 005. Editor: **N.BALAKRISHNAN**





சென்னை திருவள்ளூர் மாவட்ட SP அலுவலகத்தில் ADSP திரு.ஹரிகுமார் அவர்களை மரியாதை நிமித்தமாக சந்தித்தபோது...



தேனி மாவட்டம் எரசை கருட சித்தர் ஆசிரமத்தில் சித்தர் சுவாமிகள் அவர்களை சந்தித்து ஆசி பெற்ற தருணம்...



சென்னை ஆவடி, திருவள்ளூர் மாவட்ட 'போலீஸ் பார்வை' குழுவினருடன் ஒரு சந்திப்பு...






திருச்சி 7 ஸ்டார் அகாடமி ராக்கேஷ் சுப்ரமணி தலைமையிலான குழுவினர் மாதந்தோறும் அமாவாசையன்று அறுசுவை உணவு சமைத்து ஆதரவற்றோர் 100 பேருக்கு பசியாற்றும் நற்பணியினை துவங்கி சேவை பணியாற்றி வருகிறார்கள்.

POLICE PARVAI TAMIL MONTHLY R.Dis.No.1132/2015 RNI. TNTAM/2015/66520, Date of publication Everymonth 1st week.
Postel Registration Number TN/TBM/187/2023-25 Posted between 8-14 Every Month. Posted at - patrikachannel Egmore




TO

**4B, GD. Floor, 4th Block Adilti Paradise,
No.1, 2nd North Street, Poombuhar Nagar,
Kolathur, Chennai - 600 099.
Cell: 97 89 49 14 38, 766 755 1542**